ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1—12
வேளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரல-ஹெல பங்குனி-மீ 20-உ (2—4—1933) | மலர் 49.

வெளிவரும் முகமும்

இது ரஷியர்களின் மதப் பிதையும், கடவுளுணர்ச்சியையும் ஒழித்த எழை பங்காளன் என்கின்ற தன்மையும் அழித்து பொது உடமைக் கொள்கையை நிலை நாட்டிய தனிப்பெரும் வீரர் தோழர் லெனின் அவர்களால் மதத்தைப் பற்றி எழுதியதாகும். இதைப் படிப்பதால் மதம் பங்காளர்களுக்கும் முதலாளி அரசாங்கத்திற்கும் எவ்வளவு தூரம் உதவி செய்கின்றது என்பது விளங்கும். விலை அணா 4. சந்தாதாரர்களுக்கு விலை அணா 3.

இந்தியாவின் குறைபாடுகள்.

இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பரான்ஜபே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா ... ... 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... 0—6—0

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்த முடிவு கட்டும் ஓர் அறிய நூல். டிமை 170 பக்கம் கொண்டது.
பிரதி ஒன்றுக்கு விலை அணா. 0—6—0

சென்னை லோகல் போர்டு ஆக்ட்.

(1930ம்ஹை வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி. பி செலவு ரு. 0—5—0.

"மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்"
பெரிய புத்தகம்.
விலை ரூ. 2. (தபால் சார்ஜ் வேறு)
குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

Ready for Sale! Ready for Sale!!
The Crux of the Indian Problem
By Dr. Paranjpye M. A., D. Sc.
Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

"கடவுளும், பிரபஞ்சமும்"

கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது லீலை என்ன என்பதை சுவிஸ்தாரமாக உதாரணங்களுடன் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். அதிக பக்கங்கள், குறைந்த விலை.
பிரதி 1-க்கு விலை அணா 0-4-0.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

ஈ. வெ. இராமசாமி.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேல்நாட்டு, அதாவது ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி, டர்க்கி, கிரீஸ் கொழும்பு முதலிய இடங்களில் நமது இயக்க சம்பந்தமான தலைவர்களுடன் உட்கார்ந்து எடுத்த போட்டோக்கள் கீழ்க்கண்ட ரைஸ் பிரகாரம் விலைக்கு விற்கப்படும்.

6½ x 4¾ தோழர்கள் ஈ. வெ. ரா. நாகம்மையாரும், ஈ. வெ. ராமசாமி அவர்களும் சேர்ந்திருக்கக்கூடிய தனிக்காப்பி

1க்கு 0-8-0

ஷை 8½ x 6½ சயிஸ்1க்கு 0-12-0

ஐரோப்பாவில் எடுத்த 6½ x 4¾ சயிஸ் தனிப் போட்டோ burst 1க்கு 0-8-0

15 x 12 என்லார்ஜ் மெண்டு ஷை காப்பி 1க்கு 10-0-0

23 x 17 ,, ,, 17-0-0

தனிக்காப்பி வேண்டுபவர்கள் விலைக்கு மேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 6-4-0 ரூ. வீதம் கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

விலாசம்:—

ஸ்டியூஸ்டார் போட்டோஸ் டுடியோ,
ஸ்டேன்ஸ் ரோட்,
கோயமுத்தூர்.

மணமகள் தேவை.

இருபத்திரண்டு வயதுடையவரும் பூரண சுயமரியாதைக் கொள்கையுடையவரும், மதராஸ் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்தவரும், இலங்கையில் தேயிலை தோட்டத்தில் இளார்க் கிலை செய்பவரும் மாதமொன்றுக்கு ரூ. 80. சம்பளமுடையவருமான இந்து நாடார் வாலிபரொருவருக்கு ஒரு மணமகள் தேவை. கீழ்கண்ட விலாசத்திற்கு பிரியமுள்ளவர்கள் எழுதவும்.

சேர்திருத்தப்பிரியன்,
C/o குடி அரசு, ஈரோடு.

குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

உங்கள்.

கண் ணையும் காதையும்

கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கட்டப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta

அகில இந்தியா டிரேட் மார்க் ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்ஸி.
(govt Rgd)

உங்களுடைய டிரேட் பார்க்குகள், பெயர்கள், காப்பிரைட் முதலியவைகளை பிறர் உபயோகித்து உங்களுடைய நற்பெயரின் பயன்களையும் லாபங்களையும் அன்னியர் அடையாமல் இருக்கும் பொருட்டு 1908ம் வருஷத்திய XVI நெய்பர் ஆக்டுப்படி இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்து கொள்ளுங்கள். முழு விபரங்களுக்கு எழுதவும்.

ஏஜெண்டுகள்:—
கே. எல். ஜி. குப்தா அண்ட் கோ.,
கடைவீதி, ஈரோடு.

சுயமரியாதை தத்துவ கீதங்கள்.

கடம்பக்குளம் தோழர் நாராயணன் பாடியது. நல்ல கௌரவமான பாட்டுகள், பாரதியார் மெட்டுகள். தோழர் ஈ. வெ. ராமசாமி படத்துடன் கூடியது. நல்ல காகிதம், நல்ல அச்சு, எளிய நடை விலை அணா, 0—4—0.

விலாசம்:—
குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்ட்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலிய வைகளை நீக்கும்.

ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொருசோர்வும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பார்சிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

சுகானந்த பானச்சூரணம்.

தெகூஷ்ணமூர்த்தி தமிழ் வைத்தியசாலையில் தயார் செய்யும் சுகானந்த பானச்சூரணம் காபி பானத்திற்குப் பதிலாகத் தயார் செய்தது. அனேகவிதமான மூலிகையின் வேர், பூ, வித்து வகைகளால் தயார் செய்யப்பெற்றுள்ளது. காபியின் மணம் கலந்துளது. இரத்த சுத்தி, ஞாபகசக்தி, வேலையில் சுறுசுறுப்பு முதலியவைதரவல்லது.

காபிபானத்திற்குப்பதிலாக அநேகர் வேண்டுதலின் பேரில் தயாரிக்கப்பெற்ற இச்சூரணம் காப்பித்தூளைப்போல கொதி தண்ணீரில் போட்டு கஷாயமெடுத்து பாலுடன் கலந்தாவது அல்லது தனிப்பாலை காயவைத்து அதில் ஒரு தேக்கரண்டி அளவு சூரணம் போட்டு சர்க்கரை கூட்டிக்கலந்து பருகிவரின் வெட்டைச்சூடு, நீரழிவு, நீர்கடுப்பு, காமாலை, சோகை, அஜீரணம் பலவீனம் முதலான அனேக வியாதிகளைக்கண்டிக்கும்.

எமது "சுகானந்த பானச்சூரணம்" ஒன்றே பொருத்தமாயுளது. காலை மாலை இரண்டு நேரங்களிலும் மற்றும் தேவையான நேரங்களிலும் உபயோகிக்கலாம். இன்றே ஒரு டப்பி வாங்கி உபயோகித்து உண்மையையுணருங்கள்.

அன்பர்கள் இச்சூரணத்தைக்கொண்டு காபி, டீ, கொக்கோ முதலான பானத்திற்குப்பதிலாக உபயோகித்துவரின் காபியை மறந்து காபியின் கெடுதல் குணம் நீங்கப்பெற்று இச்சூரணத்தின் அபூர்வ சக்தியினால் அநேக வியாதிகளுக்குக் காரணமாகிய மலச்சிக்கல் நீங்கபெற்று ஆரோக்கிய வாழ்வு பெறுவார்களென்பது நிச்சயம். எமது வைத்தியசாலையிம் எல்லா வியாதிகளுக்கும் எந்த நேரத்திலும் மருந்துகள் கிடைக்கும். இங்ஙனம்,

நா. நமசிவாயம், (நேட்டிவ் டாக்டர்)
தெகூஷ்ணமூர்த்தி தமிழ்வைத்தியசாலை,
திருக்கோஷ்டியூர், ராமநாதபுரம் ஜில்லா.

செட்டிநாட்டில் தோழர் ஈ. வெ. இராமசாமி.

சிவகெங்கை உபந்யாசம்.

கடவுளுக்கு ஒருவார நோட்டீஸ்.

காரைக்குடி

19-3-33 தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-மணிக்கு தோழர் ஈ. வெ. ராமசாமி ஈரோட்டிலிருந்து பாசஞ்சர் வண்டியில் காரைக்குடி ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார்.

வழியில் திருமயம், செட்டிநாடு, கோட்டையூர் முதலிய ஸ்டேஷன்களில் நாட்டுக்கோட்டை நகர வாலிபர்களும், மற்றும் பலருமாய் வந்து தோழர் ஈ. வெ. ராவுக்கு மாலையிட்டு "முதலாளி ஆதிக்கம் ஒழிக" "பார்ப்பனர் படுமோசம் ஒழிக" என்ற கோஷம் செய்ததுடன் சுமார் 50 பேர்கள்வரை காரைக்குடிக்கு கூட வேவந்தார்கள். ரயில் வண்டியிலும் இரண்டொரு வாலிபர்கள் "சமதர்மம் ஓங்குக" "பொது உடமைதோன்றுக" என்னும் கோஷம் செய்தார்கள். ரயில் காரைக்குடிக்கு வந்ததும் ரயில்வேஸ்டேஷனின் மேடையில் தோழர்கள் தேவகோட்டை வக்கீல் எல். லக்ஷ்மிரதன் பாரதி எம். ஏ, பி. எல், வக்கீல் ஈப்பன், ராஜாராமச்சந்திரன் சேர்வை, டாக்டர் வர்க்கீஸ், ஜீவானந்தம், வேலு, நாகப்பன், கோவிந்தராஜுலு, கணபதி, அண்ணாமலை, ஆத்மராம், குருகுலம் சுப்பையா, விசாலாக்ஷி சுப்பையா, சுப. சுப்பையா, "குமரன்" உபபத்திராதிபர். இ. சிவம், மானேஜர் அருணாசலம், அ. பொன்னம்பலம் மற்றும் சுமார் 200பேர்வரை விஜயம் செய்து பல சங்கங்கள் சார்பாக மாலைகள்போட்டு வரவேற்று பிளாட்பாரத்திலேயே போட்டோஎடுத்துகாரில் ஊர்வலமாக தோழர் விசாலாக்ஷிசுப்பையா அவர்கள் ஜாகைக்கு அழைத்து செல்லப்பட்டார்கள். அங்குசுமார் நூறு பேர்களுக்கு மேலாக வேகாலே சிற்றுண்டி நடந்த பின்னர் பல உள்ளூர் வெளியூர் பிரமுகர்களும், வாலிபர்களும் வந்து காங்கிரஸ் சம்பந்தமாகவும், சமுதாயமுறை சம்பந்தமாகவும், மதசம்பந்தமாகவும் விசேஷப்பேச்சுகள் நடந்தன. தோழர்கள் "ஊழியன்" ஆசிரியர் ராய சொக்கலிங்கம், பிச்சப்பா சுப்பிரமணியம், மரகதவல்லி அம்மையார், கோட்டையூர் நடராஜன் முதலாகிய வர்களும்வந்துபோனார்கள். பிறகுதோழர் ஈ. வெ. ராமசாமி "குமரன்" பத்திரிகை ஆபீசுக்கும், "ஊழியன்" பத்திரிகை ஆபீசுக்கும் சென்றுவந்தார். தோழர் சுப்பையா விசாலாக்ஷி அவர்கள் இல்லத்தில் சுமார் இருநூறு பேர்களுக்கு மேலாகவே ஒரு பெரியபகல் விருந்து நடைபெற்றது. எல்லா மதஸ்தரும், வகுப்பார்களும், ஆண்பெண்களும் சமமாகப்போஜனம் அருந்தினார்கள். மாலை 5-30 மணிக்கு தோழர் சுப்பையா விசாலாக்ஷி வீட்டிலிருந்து வாத்தியங்களுடன் ஊர்வலமாக சுமார் 300, 400 பேர்கள் மோட்டாரை மறுத்து கால்நடையாகவே மகார்நோன்பு மைதானத்திற்கு சென்றார்கள்.

கூட்டம்.

மகார் நோன்பு பொட்டல் என்னும் மைதானத்திற்கு ஊர்வலம் வருவதற்கு முன்னமே எராளமான கூட்டம் ஆண்களும் பெண்களும் கூடியிருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் செட்டிநாடு சுற்றுப்பக்கங்களிலிருந்து அதாவது கோட்டையூர், கண்டனூர், புதுவயல், காரைக்குடி, பள்ளத்தூர், அரிமளம், புதுக்கோட்டை, ஆத்தங்குடி, ராயவரம், ஆலங்குடி, கல்லல், கூத்தனூர், அமராவதிப்புதூர், ஆரல்வயல், தேவகோட்டை, நாட்டரசன் கோட்டை, சிவகெங்கை, கீழச்சிவற்பட்டி, தென்மாப்பட்டு, திருப்பத்தூர், அரியக்குடி, ராமலிங்கபுரம், முதலிய ஊர்களிலிருந்து வாலிபர்களும் சிலபெண்களுமாக உள்ளூர் க்காரர்களும் உள்பட சுமார் 2000 பேர்கள் விஜயம் செய்திருந்தார்கள். சமீப காலத்தில் காரைக்குடியில் இவ்வளவு பெரிய கூட்டம் கூடியதில்லையென்றே சொல்லலாம். கூட்டம் சரியாக 6மணிக்குத்துவக்கப்பட்டதும், தோழர்கள் கிழிமொழி, மெய்த்தொண்டன், சமதர்மகீதங்கள் பாடினார்கள். தோழர் எல். லக்ஷ்மிரதன் பாரதி எம். ஏ, பி. எல். அவர்கள் தலைமை வகித்து தலைமை முகவுரையில் சுயமரியாதை இயக்கம் இந்த 6, 7வருடகாலமாக செய்துவந்த வேலைகளையும், தோழர் ஈ. வெ. இராமசாமி அதை எப்படி நடத்திவந்திருக்கின்றார் என்பதையும் இயக்கத்தின் வேலைத்திட்டத்தின் அவசியத்தையும், நேர்மையையும் விளக்கமாக எடுத்துச்சொல்லி ஈ. வெ. ராவின் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தைப்பற்றி சொல்லி அமர்ந்தார். பிறகு தோழர் ஈ. வெ. இராமசாமிக்கு காரைக்குடி சுயமரியாதை சங்கத்தாரால் ஒரு உபசாரப்பத்திரமும், காரைக்குடி உண்மைநாடுவோர் சங்கத்தின் சார்பாக ஒரு உபசாரப்பத்திரமும், ஆலங்குடி கூத்தலூர் சமதர்ம சங்கத்தாரால் ஒரு உபசாரப்பத்திரமும், கோட்டையூர் சமதர்ம சங்கத்தாரால் ஒரு உபசாரப்பத்திரமும் முறையே தோழர்கள், சுப்பையா, இ. சிவம், லக்ஷ்மணன், சின்னையா, ஆகியவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு சிலஊர் சங்கங்களாலும், பிரதிநிதிகளாலும், தனித்தனி வரவேற்பு மாலைகளிடப்பட்டன. இவை முடிந்ததும் தோழர் ஈ. வெ. ரா. சுருக்கமாகப்பதில் சொல்லிவிட்டு பின்னால் பேசுவதாகச்சொல்லிஅமர்ந்தார். பிறகுதோழர் ப. ஜீவானந்தம் சுயமரியாதை இயக்கம் என்பது பற்றிப் பேசினார். பிறகு 7மணிக்கு தொடங்கி ஈ. வெ. ரா. "சமதர்மம்" என்பது பற்றி சுமார் 2மணிநேரம் பேசினார். (அது அடுத்தவாரம் வெளிவரும்) பின் 9மணிக்குத் தலைவர் முடிவுரைகூற தோழர் அ. பொன்னம்பலம் வந்தனோபசாரம் சொல்ல கூட்டம் இனிது முடிந்தது.

பிறகு தோழர் விசாலாக்ஷி அவர்களில்லத்திலேயே இரவுவிருந்து நடந்தபிறகு பல தோழர்கள்தங்கள் தங்கள் ஊர்களுக்கு அழைத்தார்கள். சிவகெங்கை, தென்மாப்பட்டு ஆகிய ஊர்களுக்கு மாத்திரம் இது சமயம் வரக்கூடுமென்று தோழர் ஈ. வெ. ராமசாமி சொன்னதால் அந்தப்படி அவ்வூர் நண்பர்கள் முன்னேற்பாடு செய்ய உடனே புறப்பட்டு விட்டார்கள்.

20-3-33 மறுநாள் காலை 8மணிக்குகாரைக்குடியிலிருந்து தோழர்கள் ஈ. வெ. இராமசாமி, அ. பொன்னம்பலம், ப. ஜீவானந்தம், சுப்பையா ஆகியவர்கள் மோட்டாரில் தெம்மாப்பட்டுக்குப் புறப்பட்டார்கள். ஊர் முகப்பில் தொண்டர்கள் வாத்தியங்களுடன் வரவேற்று ஊர் வலம் துவக்கினார்கள். கல்ல வெய்யில் நேரமாயிருந்ததால், வாத்தியத்தையும், ஊர்வல ஆடம்பரத்தையும் நிறுத்திவிட்டு தெம்மாப்பட்டு வைத்தும் வீரர் வாசகசாலைக்குச் சென்று சமதர்ம சென்தமிழ் வாசகசாலையைப் பார்வையிட்டு, மாணவர்களுடையசமதர்மப் பாட்டுகளையும் கேட்ட பின் கலாசாலை உபாத்தியாயர் தோழர் சி. முருகன் ஒருவரவேற்பு உபன்யாசம் செய்தார். பிறகு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் "சமதர்மக்கல்வி" என்பதைப் பற்றி சிறு உபன்யாசம் செய்தார். பிறகு அக்கிருந்து தமிழர் சமரச சங்கத்திற்கு அச்சங்க பிரமுகர்களாலும், அச்சங்க பள்ளிக்கூட மாணவர்களாலும் சமரசப் பாட்டுப் பஜனையுடன் அழைத்துச் செல்லப்பட்டார். இது பெரிதும் தாழ்த்தப்பட்ட மக்கள் சங்கமாகும். அங்கு அச்சங்கக் காரியதரிசியால் ஒரு வரவேற்புப் பிரசங்கம் செய்யப் பட்டது. தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சமதர்மம் ஏற்பட்டாலொழிய விடுதலையில்லை யென்ற ஒரு உபன்யாசம் செய்தார்.

அங்கு தோழர் முருகன் செல்லம்மாள் அவர்கள் வீட்டில் பகல் போஜனம் நடந்ததும் பகல் 2மணிக்குதிருக்மோஷ்டியாரால் புறப்பட்டார்கள். அங்கு டாக்டர் சிவசிவாயம், நல்லையா, காளிமுத்து, பொன்னழகுமுதலியோர்கள் வரவேற்று உபசரித்து "தூர்ஜிகான்" என்ற பெயரிடப்பட்ட குழந்தையையும் கொண்டு வந்து காட்டினார்கள். அங்கு சிற்றுண்டி நடந்த பின் உடனே அங்கிருந்து நேரே.

சிவகங்கைக்கு

பிரயாணமானார்கள். சிவகங்கை காலஞ்சென்ற தோழர் எஸ். ராமச்சந்திரன் அவர்களில்லத்திற்குச் சென்றார்கள். அங்கு தோழர் கிருஷ்ணமான் ராமச்சந்திரன் அவர்களாலும் தோழர் கற்பூரசுந்தர பாண்டியன் பொன்னுசாமிபிள்ளை சேர்மன் முதலியோர்களாலும் சிவகங்கை அரண்மனை வாசல் மைதானத்தில் ஒரு பெரிய கூட்டம் கூட்டப்பட்டது. சுமார் 1500 பேர்கள் வரை கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். அவர்களில் தோழர்கள் எம். பொன்னுசாமிபிள்ளை, கற்பூரசுந்தர பாண்டியன், எஸ். ஆர். எம். வெங்கடாசலசேர்வை சேர்மன், சுப்பிரமணியபிள்ளை, விட்சாத், வக்கில் கிருஷ்ணசாமிபிள்ளை, வக்கில் வி. எஸ். அருணாசலம் செட்டியார், வேலுசாமி, கி. எ. ராமன், கே. மாதவன், டி. எம். வேலுபிள்ளை, துரைசாமித் தேவர், சிவ சுப்பிரமணியம், உடையப்பா மிராசுதாரர், தாலூகா, ஜில்லா போர்டு மெம்பர், மீனாக்ஷிசுந்தரம், சிவஞானம் முதலியவர்களாவார்கள்.

கூட்டத்திற்கு பிரபல வக்கீல் தோழர் எம். பொன்னுசாமி பிள்ளை அவர்கள் தலைமை வகிக்க தோழர்கள் கற்பூரசுந்தரம்பிரேரேபித்தார்தோழர் ப. ஜீவானந்தம்ஆமோதித்தார் பிறகு தோழர் வக்கீல் பொன்னுசாமி தலைமை வகித்து தோழர் ஈ. வெ. ராமசாமியைப் பற்றிப் புகழ்ந்து பேசி தோழர் ஈ. வெ. ராமசாமியை "சமதர்மம்" என்பதைப்பற்றி பேசும்படி கேட்டார்.

தோழர் இராமசாமிசிவகங்கையில் பேசியதாவது:—

தலைவரவர்களே! தோழர்களே! சமதர்மம் என்பது நமக்கொரு புதிய வார்த்தை அல்ல, எல்லாச் சமூகத்காரும் எல்லா மதஸ்தர்களும் விரும்புவதும் அந்தப் படியே யாவரும் நடக்கவேண்டுமென்றும் எதிர்பார்ப்பதும், ஒவ்வொரு சமூகத்தானும், ஒவ்வொரு மதஸ்தனும் தங்கள் தங்கள் சமூகங்களிலும், மதங்களிலும் இருக்கின்றதென்று சொல்லி வெருமை பாராட்டிக் கொள்ளுவதுமான வார்த்தையேயாகும். ஆனால் காரியத்தில் மாத்திரம் உண்மையான சமதர்ம தத்துவங்களை எடுத்துச்சொன்னால் 'இதுசாத்தியப்படுமா, வெள்ளை பேசுவதாகவும் இது நாஸ்திகமென்றும், துவேஷமென்றும் சொல்லுவதாகவே இருக்கிறது. எச்சமதர்மக் காரனையாவது அழைத்து உங்கள் சமூக

கத்தில் மதத்தில் சமதர்மம் இருக்கி றது என்றுயே நீ என் இப்படியிருக் கிறாய், ஆனால் என் அப்படியிருக் கிறான், நீ என் எஜமானனாயிருக் கிறாய், அவன் என் அடிமையாயிருக் கிறான், நீ பணக்காரனாய், செல்வத்த னாயிருக்கிறாய், அவன் என்னைப்போய், தரித்திரனாய், பிச்சைக்காரனாய், பட் டினிகிடப்பவனாயிருக்கிறான்? உன க்கு என் மூன்றுபேருக்கு மானிகை? அவனுக்கு என் ஓட்டைக்குடிசை கூடயில்லை? நீ என் வருஷம் 10000 ரூபாய்க்காய் லாபம் பெருக்கி ராஜபோகம் அனுபவித்து லக்ஷாதி பதியாய் விளங்குகின்றாய்? அவன் என் நஷ்டப்பட்டு, கைமுதலை இழ த்து கடன் காரனாயிருக்கிறான்? நீ என் பிச் சை கொடுக்கத் தகுந்தவனாயும் அவன் பிச்சை வாங்கத் தகுந்தவ னாயும்? நீ என் பாடுபடாமல்வேதத் தையும், மந்திரத்தையும் சொல்லிச் சொண்டு நோகாமல் வயிறு வார்க்கி றாய்? அவன் என் பாடுபட்டு இடை ப்பொழிந்து, கூன்விழுந்து இளைத் துப்போகிறான். உன்பிள்ளை என் பி. ஏ. எம். ஏ., ஐ. சி. எஸ். பாரி ஸ்டர் படிக்க முடிந்தது? அவன் பிள்ளை என் கையெழுத்துப் போட கூடத்தெரிந்துகொள்ளமுடியவில்லை. என்பன போன்றசாதாரணமானவொ துக்கேள்விகளைக் கேட்டால் சமதர்மம் மதக்காரர்கள் என்பவர்கள் என்னபதில்சொல்லுவிறார்கள் என்று யோசித்துப்பாருங்கள்.

முட்டாள்தனமானதும், போக்கிரித்தனமானதுமான பதிலை த்தான் சொல்லுவார்கள். அதெ ன்னபதிலென்றால் "ஐந்து விரல் களும் ஒன்றுபோல் இருக்கின் றனவா? ஒன்று உயர்வு, ஒன்று தா ழ்வு ஏதத்தானே கடவுள் சிருஷ்டி யின் இயற்கை இருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். இக்கப் பதிலைப் படித்த மேதாவிகளான பி. ஏ., எம். ஏ., பண்டிதர்களும், சாஸ்தி ரிகளும், குருமார்களும், பாதிரி களும், மௌலானாக்களும், தத்துவ ஞானி என்பவர்களும், மகாத்மாக் கள் என்பவர்களும் அரசியல் ஞானி கள் சீர்திருத்தக்காரர்கள், பரோபகா ரிகள். ஆஸ்திகர்கள், பிரமஞானிகள், யிரம சமாஜக்காரர்கள் முதலாகிய எல்லாப்பொருப்புவாய்ந்தவனவான களும் சொல்லுகின்றார்களென்றால் இ ந்தக் கூட்ட மக்களோ, மதமோ, அர சியலோ, ஞானமோ, சமதர்மமாகு மா என்று யோசித்துப்பாருங்கள்.

எழை பணக்காரக்கொடுமைக்கும், சோம்பேறி உழைப்பாளிதன்மையில் உள்ள வித்தியாசத்திற்கும் "ஐந்து விரல்களும் ஒன்றுபோலிருக் கின்றனவா" என்கின்ற உதாரணத்திற்கும் எதா வது பொருத்தமிருக்கிறதாவென்று யோசித்துப் பாருங்கள். இத்தபதிலே ஒன்றே முட்டாள்தனம் அல்லது போக்கிரித்தனமான பித்தலாட்டத் தனம் என்று தானேசொல்ல வேண் டும். இன்னும் வெளிப்படையாக ப்போ வேண்டுமானால் இன்று காண ப்படும் மதம், ஜாதி, சமூகம், அரசாங் கம், ஞானம், தத்துவ சாஸ்திரம் முதலியவைகளெல்லாம் சமதர்மத்து க்கு விரோதமான சூழ்ச்சி என்னத் தின் மீது கட்டப்பட்டனவென்று தான். சொல்லவேண்டும். இதுமா த்திரமல்லாமல் இவைகளெல்லாவற் றிற்கு மாதாராமாய்க் கொள்ளப்படும் கடவுள் என்ற தன்மையும் இந்த உண்மை சமதர்மத்திற்கு விரோத மான தன்மைகளே யில்லை யிறுத்தவும் அதன் குற்றத்தை உணராமலிருக்க வும், திருத்தப்பாடு செய்யாமலிருக் கவும் தந்திரக்காரர்கள் செய்த சூழ்ச் சியேயாகும். அல்லவென்றால் இச் சூட்சிகளைக் கண்டுபிடிக்க முடியாத திருத்தப்பாடு செய்துகொள்ள முடி யாத மூட மக்களின் அறியாமை உணர்ச்சியேயாகும்.

இன்றையதினம் வார்த்தையில் சமதர்மமேயொழிய காரியத்தில், வாழ்க்கைத்தத்துவத்தில் எங்கே சமதர்மம் இருக்கிறது?

ஒருவனுக்கு மகிமையில், சம்பா தனையில், அல்லது சொத்தில் இத் தனையில் ஒரு பங்கு என்று பிச்சை கொடுத்துவிட்டால் அதுசமதர்ம மாகிவிடுமா? ஒருவனை தொட்டுக் கொண்டால் அது சமதர்மமாகி விடுமா? ஒருவனை இருத்து சாப்பிட்டுவிட்டால் அது சமதர்ம மாகி விடுமா? ஒருவனைக் கோவிலுக் குள்விட்டுவிட்டால் அது சமதர்ம மாகிவிடுமா? ஒருவன் கூடஇருத்து கடவுளைப்பிரார்த்தனை செய்தால் அது சமதர்மமாகிவிடுமா? ஒருவன் கஞ்சித்தொட்டிவைத்து எல்லோருக் கும் கஞ்சிஊற்றினால் அது சமதர்ம மாகிவிடுமா? ஒரு சத்திரம் கட்டி வைத்துவிட்டால் அது சமதர்மமாகி விடுமா? எல்லோரையும் ஒன் றாய் உட்கார்த்தி படிக்கச்சொன்னால் சமதர்மமாகிவிடுமா? எல்லோரும் ஒன்றாயிருந்து கும்பிட ஒரு கோவில் கட்டி விட்டால் சமதர்மமாகிவிடுமா வென்றுயோசித்துப்பாருங்கள். இவற் றால் இதைஎய்கின்ற மனிதனு க்கோ, இதை அனுபவிக்கின்றமனி தக்கோ, முறைகேடேதுண்டுமென்ன? லாப மென்ன? இவையெல்லாம் வெறும் பித்தலாட்ட சமதர்மங்கள்.

உலகம்பொது; உலகத்திலுள்ளசெ ல்வம்போகபோக்கியம்பொது; உலகத் தில் மனிதவாழ்க்கைக்கு வேண்டிய காரியத்திற்காக மனிதன் செய்ய வேண்டிய வேலைகளெல்லாம் பொது, அதனால் எந்தபடியும் பலன்களெல் லாம் எல்லாமக்களுக்கும் பொது-சரி பாகம் பிரித்துக்கொள்ளத்தக்கது. இதற்கு மீறி நடந்தால் குற்றம்-தண் டிக்கத்தக்கது என்று எந்தமதம், எந்த சமூகம், எந்த அரசாங்கம், எந்த அரசியல் ஞானம், எந்த மதத்தத்துவ ஞானம், எந்த மகாத்மா முதலிய வைகள் கூறுகின்றவை என்பதை சிறிது யோசித்துப்பாருங்கள். மத வெறி காரணமாக தன்தன் மதம் சமதர்மமதம் என்பதும், சமயவெறி காரணமாக தன்தன் சமயம் சமதர்ம சமயமென்பதும், அரசியல்வெறி-சூழ்ச்சி காரணமாக தன்தன் அரசியல் முறை சமதர்மம் என்பதும் மானபித்தலாட் டங்கள்தான் நடைபெறுகின்றனவே யல்லாமல் உண்மைசமதர்மம் எங்கே இருக்கின்றது? எதில் இருக்கின்றது என்பதை நடுநிலையிலிருந்து யோசி த்துப்பாருங்கள்.

அரசனும், ஆண்டியும் ஒன்றுயிருந்து ஒரு ஓட்டலிலிருந்து சாப்பிட்டால், ஒரு கோயிலில் கும்பி ட்டால், ஒரு பள்ளிக்கூடத்தில்படித் தால், ஒரு தெருவில் நடந்தால் ஒருகுளத்தில்தண்ணீர்சாப்பிட்டால், ஒரு காற்றை சுவாசித்தால் இவையெ ல்லாம் எப்படி சமதர்மமாகிவிடும்? என்று யோசித்துப்பாருங்கள். இதை ச்சொல்லி மக்களை இன்னும் எத் தனை காலத்திற்கு உண்மையான சமதர்ம மில்லாமல் கொடுமைப்படு த்தி ஏழைகளின்-தொழில் செய்து, பாடுபடும் பாட்டாளிகளின் ரத்த த்தை சோம்பேரிகளும், சுயநலக்கா ரர்களும், வன்னெஞ்சக்காரர்களும் உரிஞ்சும்படி விட்டுக்கொண்டிருப் பது என்பதை யோசித்துப்பாருங் கள். மேல்கண்ட கொடுமைகளுக் கும், பித்தலாட்டங்களுக்கும் உயர்வு தாழ்வுகளுக்கும் என்ன சமாதான மிருக்கின்றது. 'ஆண்டவன் செயல்,' 'கடவுள் சித்தம்,' 'அவனுக்கு முன் ஜென்மப்பலன்' என்று சொல்வ தேயன்றி 'ஐந்துவிரல்களும்' ஒன்று போல் இருக்கின்றனவா என்று கேட்கும் கேள்வியுமல்லாமல் வேறு என்ன? ஆண்டவன் செயலே ஒப்புக் கொள்ளாதவனும் ஐந்துவிரலும் ஒன் றுபோலிருக்குமா என்கின்ற சமா தானத்தை ஏற்றுக்கொள்ளாதவனும் இந்த சமாதானத்தைப் பற்றி என்ன சொல்லக் கூடும்? இந்த சமாதானம் போக்கிரித்தனமானதும், முட்டாள் தனமானதும், பித்தலாட்டமானதும் என்று தானே சொல்லித்தீர வேண் டும். ஐந்து விரல்களும் ஒன்றுபோலி ருக்கின்றனவா வென்று கேட்டவர் கள் அரசியலில் சமத்துவம், சுதந் திரம் சகோதரத்துவம் கேட்ப தின் கருத்து என்ன? ஒன்றுப் சாப்பிடவும், ஒன்றுய் பிரார்த்தனை செய்யவும், ஒன்றுப் படிக்கவும், ஒன் றுப் உத்தியோகம் பார்க்கவும் ஒன்றுய் அதிகாரம் செலுத்தவும், உரிமைகள் கேழ்ப்பதின் அர்த்தம் என்னவென்று யோசித்துப்பாருங் கள்.

வெள்ளைக்காரன் இந்த நாட்டுச் சொந்தக்காரன் அல்லாததால் இந்த நாட்டை விட்டுப்போய் விட வேண் டும் என்கின்றோம். அதே முறையில் பணக்காரனும், முராசுதாரனும், ஜமீன் தாரனும் பாடு படாதவர்களானதி னால் அவர்கள் மற்றவர்கள் பட்டபாட் டில் பலன்களோ அனுபவிக்கத்தகுதி யுடையவர்கள் அல்லவானதால் அவை களை எல்லாம் பாடு படுபவர்களு க்கு விட்டு விட்டு அவர்களும் மண் மென்று நாம்கள் சொன்னால் 'ஐந்து விரல்களும் ஒன்று போலி ருக்கிறதா? ஆண்டவன் செயலுக் கு யார் என்ன செய்யக்கூடும்?" என் றால் இது போக்கிரித்தனமான சமா தானமா? இல்லையா வென்று யோசி த்துப்பாருங்கள்.

சில சமயக்காரர்கள்—சீர்திருத்த வாதிகள் பிறவியில் ஜாதி உயர்வு தாழ்வு கூடாது என்கின்றார்கள். காரணம் என்ன வென்றால் சம தர்மம் என்கின்றார்கள். இது சரி தான். ஆனால்பிறவியில் பணக்காரர் கள், ஜமீன்தாரர்கள் ராஜாக்கள், பிர புக்கள், ஏழைகள், வெட்டியான் கள், என்னும் வகுப்புகளும் பண விஷயமான—தொழில் விஷ யமான வித்தியாசங்களும் இருப்பது சமதர்மமா என்று கேட்டால் அதை "ஆண்டவன்—செயல்" என்கின்றார் கள். இது நியாயமா அல்லது அயோ க்கியத்தனமா வென்று யோசித்துப் பாருங்கள். போலி சமதர்மத்தை யும், ஆண்டவனையும், ஐந்து விரல் களையும் போக்கிரிகள், தங்கள் சுய நலத்துக்கு தகுந்தபடி உபயோகி த்துக்கொண்டு மூடர்களை நம்பச் செய்து, மோசம் செய்து வருகின்றார் கள். ஆதலால்சமதர்மத்தில்உண்மை யான திருஷ்டியுள்ளவர்கள் இந்த ஆண்டவனை - சமதர்மத்துக்கு விரோ தமான ஆண்டவனை போக்கிரிக ளும், சோம்பேரிகளும் தங்கள் சுய நலத்துக்கு உபயோகித்துக்கொண்டு தொழில்செய்யும்பாட்டாளிகளையும், ஏழைமக்களையும் ஏமாற்றி உப்யோ கிக்கும் ஆண்டவனை அடியோடு ஒழிக்க வேண்டியதுதான் சமதர்ம த்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டும் வேலையாகும்.

ஏனெனில் ஆண்டவன் என்கி ன்ற ஒரு சாக்கு சொல்ல இட மில்லையானால் உலகிலுள்ள அயோக்கியத்தனங்களுக்கும், கொ டுமைகளுக்கும், பித்தலாட்டங்களு க்கும்எத்தனிதனாலும் எப்படிப்பட்ட சமாதானமும் சொல்ல முடியவே முடியாது. அப்படி வேறு எந்தசமா தானமும் சொல்லப்பட்ட போதி லும் அந்த சமாதானங்கள் அரை நிமிஷநேரம் கூட நிலைக்காது. ஆண்ட வன், கடவுள், பகவான் என்கின்ற தான வார்த்தைகள் அர்த்த மற்ற தும் வெளுவாலமாகச் சொல்லிச்சொ ல்லி மக்களைப்பயப்படுத்தி அவர் களது ரத்தத்தில்ஊரச்செய்து விட்ட திலுலும், அந்த ஒரு வார்த்தைக்குத் தான் உழைப்பாளிகளான மூட ஜனங்கள் பயப்படுகின்றார்கள்.

உண்மையான சமதர்மத்தைவிரும் புகின்றமக்கள் எவ்வளவுதான் ஆஸ்தி கர்களா யிருந்தாலும் கொஞ்ச காலத் நிற்காவது அவர்களதுகடவுளைபகிஷ் காரம் செய்து வைத்துத்தான் ஆக வேண்டும். அல்லது ஐந்துநாள் பத்து நாள் வாய்தாக்கண்டுகடவுளுக்கு ஒரு நோட்டீஸாவது கொடுத்தாக வேண் டும். அதாவது,

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

ரோஜா முக்கையா

பொருளாதார ஆயுதபரிகரணை

மகாநாடுகளின் நோக்கம்.

பொதுவுடமை உலகில் இத்தகைய புரட்சிகள் உண்டா?

[நாகை டி. எஸ். எஸ். கோமுந்து]

உலகத்தில் மக்கள் முற்போக்கிற்கு பெருந்தடைக் கல்லாக விருப்பது "எதேச்சாதிகாரம், ஸ்தாபித்தியம்" இவ்விரண்டு முறைகளு மேயாகும். இத்தகைய முறைகளைத்தாங்கி நிற்பவர்கள், மன்னர்கள், பணக்காரர்கள் முதலாளிகள், ஆகியவர்களாகும். என்வே இவர்களை ஒழித்து விட்டால் மேற் சொன்ன முறைகளும் இவர்களுடன் கூடவே மடிய வேண்டியதுதான் தற்போது உலகத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதலின்காரணத்தால் மக்களது கவனமும் இதையே கவர்ந்து நிற்கிறது. நாடு பிடிக்கும் ஆசையால் நடந்த ஸரோப்பா யுத்தத்திற்குப் பிறகு உலகத்தில் நடந்த மாருதல்கள் நேயர்கள் அறிந்த விஷயமே. மன்னர்கள், பணக்காரர்கள், முதலாளிகள் ஆகிய ஒருசிலசோம்பேறிகளின் ஆடம்பரமான வாழ்க்கைக்கும், பதவி வேட்டைக்கும், அதிகார ஆசைக்கும், ஆயிரக்கணக்கான மக்களது இரத்தம் சிந்த வேண்டியிருக்கிறது. மக்களிடம்வேற்றுமையின்றி உயர்வு, தாழ்வு, ஏழை, பணக்காரன், முதலாளி தொழிலாளி, என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் ஓர் சமம் என்ற நிலையில் "பொருளாதார" வாழ்க்கையைபொதுவுடமை யாக்கி வாழ்க்கை நடத்தினால் அம்மக்களுக்கு, தட்டிப்பதிக்கும்—சுரண்டும்—தொழிலின் போராசை காரணத்தால் எற்படும் போரில் நம்பிக்கையோபிரியமோ, இருக்குமா? இருக்கமுடியாது.

இவ்வாறு ஏற்பட முடியாதபடி தடுக்க, அரசன்கடவுளின் அவதாரம் என்றும், அவர்கட்டளையை சிரமேற்றுங்கி நடக்கவேண்டும் என்றும் ராஜவிசுவாசத்துடன் இருக்க வேண்டும் என்றும், பணக்காரர்கள், முதலாளிகள், செல்வச் செறுக்குடனிருக்கக்காரணம் அன்னவர்கள் முன்பு செய்த கர்மாவின் படி கடவுளால் தூனிக்கப் பட்டது என்றும் சொல்லி, மற்ற பெறும் பான்மை மக்களை இவர்கட்கெல்லாம் அடிமையாக விருக்க வேண்டும் என்று மடாதிபதிகளாலும், குருக்கள் களாலும், போதிக்கப்பட்டு, இவர்களுக்கு அடிமைப்பட்டது போதாதென்று மதத்தின் பெயராலும், அர்த்த மற்ற பொருள் பெயராலும் அடிமைப்படுத்தி இருக்கின்றனர். இவ்வளவு சூழ்ச்சிக்கும், சுய நலத்திற்கும் காரணமாயிருப்பது எது வென்றால், அது தான் "பொருளாதாரம்" என்ற ஒரே முக்கியமான விஷயம். உயர்வுக்கும், தாழ்வுக்கும், ஏழை பணக்காரன், என்பதற்கும், "பொருளாதார" மே காரணம். ஆகவே, பணக்காரத்தன்மையை நிர்மூலமாக்கி, ஏழைகளை உயர்த்தினால், எல்லா மூடநம்பிக்கையும், அடியுடன் மறைந்து போம் என்பது மறுக்க முடியாத உண்மை.



சென்ற 12-3-33ல் திருவாரூரில் தோழர்கள் டி. என். இராமன்—கனகாபுஜம் அம்மாள் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நடந்த பொழுது எடுத்த படம்.

உட்கார்ந்திருப்பவர்கள்:—தோழர்கள் கே. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல். சிவசுப்பிரமணியம், (வக்கீல்) டி. என். இராமன், கனகாபுஜம் அம்மாள், ஈ. வெ. ராமசாமி.

நிற்பவர்கள்:— தோழர்கள் சீர்காழி சுப்பிரமணியம், ஆர். வி. கோபால், பொன்னம் பலனார், இராமலிங்கம், இராஜசுத்தானம், அழகர்சாமி,

பித்து விட்டதுடன், ஸ்பெயின், இட்டாலி, டர்க்கி, சீனா, முதலிய இடங்களில் செருசிக்கிரத்தில் வேரூன்றிவிட்டது. ஜர்மனியில் யுத்தத்தால் ஏற்ப்பட்ட வறுமையின் காரணத்தால்," பொதுவுடமைக் கொள்கையொன்றே, வறுமையைப் போக்க ஏற்ற தென்று அங்கு மேற்படி இயக்கம் ஓங்கிநிற்பதுடன் இப் பொழுதுவெற்றி பெறக்கூடிய நிலையிலுமிருக்கிறது. எனவே நாடுபிடிக்கும் பேராசைக்குக் காரணமாயுள்ள அரசனும், பெரும்மான்மையான மக்கள் உபயோகிக்க உரிமையில்லாது தனக்கே சொந்தமென பொருளாதாரத்துறையில் ஆதிக்கம் செலுத்தும் பணக்காரர்களும், முதலாளிகளும் ஒழிக்கப்பட்டுமக்கள் வாழ்க்கைக்கு உபயோகமான ஸ்தாபனங்களையும், பொருளாதாரங்களையும் பொதுவுடமையாக்கி சரியான தொழில்காயக சர்க்கார் நடக்கும்நாட்டில், பொருளாதாரக் கஷ்டமோமற்ற உயர்வு-தாழ்வு என்ற பாகுபாடோ இருப்பதற்கிடமில்லை.

இத்தகைய முறையானது உலகத்தில் எல்லாத்தரத்திலும்நடைபெறச்செய்யப்படுமானால், பொருளாதாரக்கஷ்டத்தைத் போக்க உலகப் பொருளாதாரமகாநாடு சாம்ராஜ்யவீராக்சே மக்டனல்ட் தலைமையில் கூட வேண்டியதவசியமில்லை. யுத்தத்தை ஒழிக்க ஆயுத பரிகரண மகாநாடும் கூடவேண்டியதில்லை. ஆகவே இவ்விரு கஷ்டத்தையும் போக்கசாம்ராஜ்ய வீரர்கள் சர்வதேச சங்கத்தில் சோம்பேறிகள் மடத்தில் கத்துவதைப்போல் கத்தாமல் வல்லரசுகள் தங்கள் ஏகாதிபத்தியச் செறுக்கை விட்டொழித்து, சர்வதேசப்பொது உடமைக் கட்சியை நாடி ஏகோபித்து எல்லோரும் ஒருமுடிவுக்கு வருவதே சாலச் சிறந்ததென நாம் சொல்வோம். இதைத்தான் சுயமரியாதைக்காரர்கள் சொல்லிவருகிறார்கள். உண்மையைச் சொல்லுமிடத்து அவர்களின்மேல் சீறிவிழுந்து மதத்துரோகி, தேசத்துரோகி, நாஸ்திகர்கள், என்று சொல்லு

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

தஞ்சை ஜில்லா

மூன்றுவது சுயமரியாதை மகாநாடு

நாகப்பட்டணம்.

8, 9—4—33 சனி, ஞாயிறுகிழமைகளில் நாகை கோர்ட்டுக்கெதிரில் அமைக்கப்பட்டிருக்கும் சமதர்ம பந்தலில் நடைபெறும்.

புதுக்கோட்டை

தோழர் கே. முத்துசாமி வல்லத்தரசு B. A. B. L., M. L. C., அவர்கள் தலைவர்.

திருச்சி தோழர் எஸ். நீலாவதி அம்மையார் ஆரம்பவிழாவாற்றுபவர்.

தோழர் ஏ. சிவராமசாமி அவர்கள் வரவேற்பு அக்கிராசனர்.

ஜோப்பா முதலிய மேல் நாட்டு சுற்றுப்பிரயாணத்தை முடித்துத்திரும்பிய இயக்க ஸ்தாபகர் "ஈரோடு தோழர் ஈ. வெ. ராமசாமியும்" மகாநாட்டுக்கு விஜயம் செய்வார்.

இன்னும் இயக்க தோழர்களில் பெரும்பாலார் மகாநாட்டுக்கு விஜயம் செய்கிறார்கள். தோழர் ஈ. வெ. ராவின் மேல் நாட்டு சுற்றுப்பிரயாணத்துக்கு பிறகு இயக்கத்தின் வருங்கால வேலைத்திட்டத்தை தக்கமுறையில் திருத்தி அமைக்கவும், வரப்போகும் மாகாண மகாநாடு ஒத்துக்கொள்ளவேண்டிய ஈரோடு கமிட்டிக்கூட்டத்தின் முடிவைப்பற்றி யோசிக்கவும் இம் மகாநாடே முதல்முதலாக நடைபெறுகிறது. ஆகையால் எல்லோரும் விஜயம் செய்யவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வரவேற்புக்கமிட்டி கட்டணம்	3—0—0
பிரதிநிதி கட்டணம்	1—0—0

வரவேற்பு கழகத்தாரும், பிரதிநிதிகளும் அவரவர்கள் டிக்கெட்டை மகாநாட்டு பந்தலில் காண்பித்து சாப்பாடு டிக்கெட் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். வி. கோபால், கே. முருகேசன்,
1—4—33 கூட்டுக்காரியதரிசிகள்.

டி. பி. ஆறுமுகம்,
பொதுக்காரியதரிசி.

விளக்குகளில் புரட்சி

200 கோடி மெழுகுவத்தி வெளிச்சம்.

செயற்கைச் சந்திரன்.

சிகாகோவிலுள்ள பேர்போன "போல்மாலில்" என்ற முப்பத்தொன்பது மாடி மாளிகையின் உச்சியில் பெரும்பாலும் சந்திரனைப்போன்ற ஒரு விளக்கை அமைத்திருக்கிறார்கள். ஆகாயத்தில் இராக்காலங்களில் பறந்து செல்லும் விமானிகளுக்கு உதவ வேண்டுமென்பதே இவ் வெளிச்சத்தை அமைத்திருப்பதன் உத்தேசமாம். இந்த வெளிச்சத்திற்கு "லிண்ட்பர்க்லேட்" என்று பெயர் வைக்கப் பட்டிருக்கிறது. ஏனெனின், தோழர் லிண்ட்பர்க் என்பவர் தாம் முதல் முதலில் அமெரிக்காவில் விமானத்தில் பறந்தவர். 1933 ம் வருடம் சிகாகோவில் நடைபெறப்போகும் உலக சந்தையின் போது விஜயம்செய்யும் கோடிக்கணக்கான விமானிகட்கு இந்த வெளிச்சம் பெரிதும் பயன்படாலாமென்று உத்தேசிக்கப்படுகிறது. இந்தச் செயற்கைச் சந்திரனின் ஒளியின் அளவு 200 கோடி மெழுகுவர்த்தி பிரகாசமாம். இதுவரையிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் வெளிச்சங்களில் இதற்கு ஒப்பாகவோ இதற்கடுத்தபடியாக நிற்கத் தகுந்ததாகவோ வான வெளிச்ச மெதுவுமில்லை. இந்த வெளிச்சம் 259 மைல் தூரத்தில் வருகிறவர்கட்குக் கூட தன்னை தெரியுமாம். வானம் கன்முக மேகங்களால் மூடப்பட்டு வழி தெரிவதற்கியலா திருக்கின்ற காலமாயிருந்தால் லிண்ட்பர்க்லேட் 100மைல் தூரம் பிரகாசிக்குமாம். 1930-ம் வருடம் முதல் இவ்வினக்கு அமெரிக்க ஆகாய விமானிகட்கு வழிகாட்டியாயொளிர்ந்து வருகின்றது. இவ்வினக்கைக் கட்டுவதற்காக 17டன் இரும்பு தேவைப்பட்டது.

அதிசய மின்சார விளக்கு

சாதாரண மின்சார விளக்குகளில் திரியில்லாமல் பிரகாசத்தை உண்டுபண்ணும் ஓர்புதியவழி பிரிட்டனில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அவ்விளக்குகளால் சமீபத்தில் வெம்பிளி முதல் ஹாரோ வரையில் அலங்காரம் செயது காண்பிக்கப் படுமென்று தெரிந்து. இது பற்றி எழுதும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை மின்சார விளக்குகளில் இஃது ஓர் புரட்சியென்றும் உலகிலேயே அதிகப் பிரகாசத்தைக் கொடுக்கும் ஒளி என்றும் அதனை உண்டுபண்ணுவதிலேற்படும் செலவு சொற்பமாயிருக்கிறதென்றும் சொல்லுகிறது. இவ் விளக்குகளில் திரிக்குப்பதிலாக ஒருவித "காஸ்" நிறப்பப் பட்டிருக்கிறது. சாதாரண விளக்குகட்கு எவ்வளவு மின்சாரம் தேவையோ அதில் நூற்றில் இரண்டுபாகமே இவ்விளக்கு கட்குத் தேவையாம். இவ்விளக்கைக் கண்டுபிடித்த எஞ்சனீயர் சமீபகாலங்களில் எல்லாத் தெருக்களும் குறியப் பிரகாசத்துக்கொத்த அவ் விளக்குகளால் நிறப்படும் என்றும், அவ் விளக்குகட்காகத் தூண்கள் தேவையில்லை யென்றும் ரோட் ஓரங்களிலேயே தரையில் புதைத்து வைத்து வெளிச்சத்தைப் பரப்பலாமென்றும் சொன்னார்.

"தமிழன்"

சென்னை சுயமரியாதை இளைஞர்மன்றம்.

இம் மன்றத்தின் வாராந்திரக் கூட்டம் 26-3-33 ஞாயிற்றுக்கிழமை பகல் 2மணிக்கு மன்றத்தின் காரியாலயத்தில் மன்றத்தின் காரியதரிசி. தோழர் எஸ். ரங்காதன் தலைமையில் கூடிபிற்றது. அது சமயம் தோழர்கள் பி. தனிகாசலு, கே. கிருஷ்ணசாமி, எல். ராதா கிருஷ்ணன் சாமி, சதாசிவம். டி. சம்பந்தம், எம். எஸ். முத்து முதலியோர் "பொதுவுடமை" என்பது பற்றி பேசினர்கள்.

(ஒரு நிருபர்)

பொதுவுடமைத் தத்துவங்கள்.

Principles of Communism by Engels. (1847)

(பேர்டரிக் ஏஞ்சல்ஸ் எழுதியது)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

கேள்வி:—தனிப்பட்ட சொத்துரிமையைச் சமாதான முறையில் அழித்துப் பொதுவுடமைக் கொள்கையை ஏற்படுத்துவது சாத்தியமான காரியமா?

பதில்:— பொது உடமையாளர் தனிப்பட்ட சொத்துரிமையைச் சமாதான முறையில் அழிக்கச் சாத்தியமாக இருந்தால் அப்படியே செய்வது சாத்தியம்தான். அதற்குப் பின்வாங்கவுமாட்டார்கள். அவர்களுக்குச்சதியாலோசனை வழியால் கெடுதல் களும் வீண் பணச்செலவாவதும் நன்றாகத்தெரியும். அவர்களுக்கு எக்காலங்களிலும் புரட்சியியக்கங்கள் சில குறிப்பிட்ட வகுப்புக்களின் அபிப்பிராயங்களினால் மட்டும் நடக்கவில்லை என்பதும் தெரியும். அதே மாதிரி அவர்களுக்கு ஏழைத்தொழிலாளிகளின் அபிவிர்த்தியானது ஒவ்வொரு "நாகரீக" தேசத்திலும் பலவந்தமாகத் தடுக்கப்படுகிறது என்பதும், பொதுவுடமையாளர்களின் விரோதிகள் புரட்சியைக் கிளப்பக்கூடிய விதமாக நடந்து கொள்கிறார்கள் என்பதும் தெரியும்.

எப்பொழுதாவது இந்த ஒடுக்கப்பட்ட ஏழைத் தொழிலாளிகள் தங்களுடைய எதிரிகளின் நிர்ப்பந்தத்தினால் புரட்சி இயக்கத்தில் இறங்கினால் பொதுவுடமையாளர்கள் அவர்கள் கட்சியில் சேர்ந்து கொள்வார்கள். இப்பொழுது பொதுவுடமையாளர் சமூகத்திலுள்ள வழல்களை எப்படிப் பயனின்றிப் பகிரங்கப்படுத்துகிறார்களோ, அதே மாதிரி, அப்புரட்சிக்காலங்களில் தொழிலாளரின் சார்பாக வேலை செய்வதற்கும் சுறுசுறுப்பாக முந்துவார்கள்.

கேள்வி:— தனிப்பட்ட சொத்துரிமையை ஒரேயடியில் அழிக்க முடியுமா?

பதில்: — முடியாது. ஏழைத் தொழிலாளிகளின் புரட்சி இயக்கமானது கூடிய சீக்கிரம் நடந்தேற்றும். அப்புரட்சி தற்கால சமுதாயத்தைப் படிப்படியாகவே தான் மாற்றும்.

கேள்வி:—இந்தப் புரட்சிஇயக்க நினம் எவ்விதப் போக்கோடு நடைபெறும்?

பதில்:—முதலாவதாக நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏழைத்தொழிலாளர்களின் ராஜீய உரிமை உச்சஸ்தானத்தைக்குறிக்கக்கூடிய ஒரு சமதர்ம ஜனநாயகச்சட்ட அமைப்பானது தயாரிக்கப்படும். உதாரணமாக, ஏழைத்தொழிலாளர்களே பெரும்பான்மை யோராக இருக்கும் இங்கிலாந்தில் ஏழைத்தொழிலாளரின் ஆதரவையானது நேர்முகமாகவே. இருக்கும் ஏழைத்தொழிலாளரைவிட சிறு விவசாயிகளும், கீழ்தர மத்திய வகுப்பு நகரத்தாரையும் அதிகமாகக்கொண்ட பிரான்சிலும், ஜர்மனியிலும் ஏழைத்தொழிலாளரின் ஆதிக்கமானது மறைமுகமாகவேயிருக்கும்.

ஜனநாயக ஆட்சியானது (Democracy) தனிப்பட்ட சொத்துரிமை நேர்முகமாகத்தாக்குவதற்கு, ஏழைத்தொழிலாளரின் ஜீவியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் அவர்களுக்கு ஓர் கருவியாக இல்லாவிட்டால் அது பிரயோஜனமற்றதாகிவிடுகிறது. தற்கால சம்பந்தங்களை மாற்றுவதற்கு மிகவும் முக்கியமான கீழ்க்கண்ட சீர்திருத்தங்களை அவசியமாகின்றன அவையாவன.

A 1. படிப்படியான வருமான வரி,

2. இறந்தவுடனே சொத்திற்கு வரிவிதித்தல்,

3. சகோதரர் களுக்கும், மக்களுக்கு முள்ள வாரிசு பாத்தியத்தையழித்தல்,

4. பெரும்முதலாளிகளை அரசாங்கத்திற்கு கடன்கொடுக்கும்படி கட்டாயப்படுத்துதல் ஆகிய இவ்வழிகளால் தனிப்பட்ட சொத்துரிமையை கட்டாயமாக ஒழித்தல்.

B நிலச்சுவான்தார்களையும், ஆலைச்சொந்தக்காரர்களையும், ரயில் கப்பல் முதலியவைகளை நடத்தி வரும் (முதலாளிகளையும்) பிரபுக்களையும், அவர்களுடைய தொழில்களிலிருந்து படிப்படியாய் விலக்குதல் செய்தல். இக்காரியம் அரசாங்கமானது புதிய உற்பத்திக் கைத்தொழில்களைச் சிருஷ்டி செய்தோ அல்லது அம்முதலாளிகளுக்கு நஷ்டயீட்டைக் கொடுத்தோ, பரிமுதல் நடைபெறும்.

C பொது ஜனங்களில் பெரும்பான்மையோருக்கு விரோதமாகக்கலகம் செய்து நாட்டை விட்டு ஓடுகின்றவர்களின் சொத்தையும் (கலகக்காரர்களின் சொத்தையும் பரிமுதல் செய்தல்.

D ஆலைகளிலும், தொழிற் சாலைகளிலும், வேலை செய்யும் தொழிலாளர்களை ஒரு கட்டுப்பாட்டுடன் அமைத்து அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் போட்டியிடும் சுபாவத்தை வெருட்டிவிட்டு சர்க்கார் ஆலைகளில் எவ்வளவு உயர்தரக்கூலி கொடுக்கப்படுகிறதோ அதேமாதிரி இதர ஆலைச் சொந்தக்காரர்களையும் கொடுக்கும்படியாகக் கட்டாயப்படுத்துதல்.

E தனிப்பட்ட சொத்துரிமையானது அநுகூலப்படும்வரையில் சமூகத்திலுள்ள மக்கள் யாவரையும் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தல்.

F. தனிப்பட்ட பாங்கு (Bank) களையும் லேவாதேவி செய்கின்றவர்களையும் அடக்கியும் அரசாங்கத்தின் மூலப் பொருள் உதவி பெற ஒரு தேசிய பாங்கை ஏற்படுத்தியும் எல்லாப் பணத்தையும் அரசாங்கத்தின் பொறுப்பின்கீழ் அமைத்தல்.

G. தொழிற்சாலைகள், ஆலைகள், இருப்புப்பாதைகள், கப்பல் போக்குவரத்து இவைகளை அபிவிருத்தி செய்தல், பயிரிடாத நிலங்களைப்பயிரிட்டும் பயிரிட்ட நிலங்களைச் சீர்திருத்தியும் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்துதல்.

H. எல்லாச் சிறுவர்களுக்கும் தேசத்தின் மேற்பார்வையின் கீழ் தேசியஸ்தாபனங்களின் மூலம் இலவசகல்வியளித்தல்.

I. கிராமாந்திர வெளியிடங்களில் உன்னதமான மாளிகைகளைக் கட்டி அவற்றில் விவசாயத்தையும், கைத்தொழில்களையும் மேற்கொள்ளும் குடியானவர்களையும், தொழிலாளர்களையும் வசிக்கச் செய்தல்.

J, சுகாதாரமற்ற வீடுகளை அழித்தல்.

K. போக்கு வரத்துசாதனங்களெல்லாம் அரசாங்கத்தின் பொறுப்பிலேயே அமைத்தல்.

இந்த எல்லா சீர்திருத்தங்களும் ஏக காலத்தில் அமுலுக்குக் கொண்டுவர முடியாதென்பது உண்மையே. ஆனால் ஒன்றை அமுலுக்குக்கொண்டுவந்தால் மற்றவைகளையும் அமுலுக்குக்கொண்டுவர நேரும்.

தனிப்பட்ட சொத்துரிமையை அழிக்க விரும்பும் இயக்கத்தின் முதல் பாணமானது தொடுக்கப்பட்டபின்னர் ஏழைத்தொழிலாளர்கள் மேலும் மேலும் முன்னேற்றிச் செல்லும்படியாகத் தூண்டப்பட்டு அரசாங்கத்தின் பொறுப்பின் கீழ் எல்லா மூலதனத்தையும், எல்லாவித விவசாய உற்பத்திகளையும், எல்லாவித கைத்தொழில்களையும், சகல போக்கு வரத்து சாதனங்களையும் அமைப்பார்கள். முன்கூறப்பட்ட சீர்திருத்தங்களெல்லாம் இதே எண்ணத்தையே கோறுகின்றன.

இறுதியில் மூலதனமும் உற்பத்திப்பொருள்களும் அரசாங்கத்தின்கீழ் அமைக்கப்படும் பொழுது தனிப்பட்ட சொத்துரிமை முழுதும் அழிக்கப்படும். அந்நாயம் பணமென்பதே அவசியமில்லாமல் போய் விடும். உற்பத்தியானது மிகவும் விருத்தியடைந்து பண்டைய சமூகசம்பந்தங்களின் மீதியான வித்தியாசமான கொள்கைகளும் மறைந்து விடும்.

கேள்வி:—இவ்விதப் புரட்சியானது ஓரே ஒரு தேசத்தில் மாத்திரம் நடக்குமா?

பதில்:—இல்லை. பரந்த திட்ட (யந்திரமுறை) க்கைத்தொழிலானதுலகத்தை ஒரு பெரியபுதிய வியாபாரசந்தையாக உண்டாக்கிவிட்டதால் உலகிலுள்ள ஜனங்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் பிணைக்கப்பட்டவர்களாகின்றனர். ஆகவே எங்கு பார்த்தாலும் முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் உள்ள சண்டையே நடந்துவருகின்றன. பொதுவுடமைப்புரட்சி இயக்கமானது கேவலம் ஒரு தேசியப்புரட்சியல்ல. அது ஏககாலத்தில் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜர்மனி ஆகியவிடங்களில் நடைபெறும். அக்கிளர்ச்சியானது அத்தேசங்களிலுள்ள கைத்தொழில் உற்பத்தியின் அபிவிர்த்தியையும் அத்தேசத்தொழிலாளர்களின் தன்மையையுமே பொறுத்தது. ஜர்மனியில் அப்புரட்சியானது தாமதமாகவே நடைபெறும். ஆனால் அது இங்கிலாந்திலோ வெகு சீக்கிரம் நடைபெறும். இப்புரட்சியானது ஒரு சர்வ தேச (உலக) இயக்கமாகும். ஆகவே அதற்கு உலக

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.

ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்கம்

திறப்புவிழா.

கான்சாகிப் கே. ஏ. ஷேக்தாவுது அவர்கள் திறந்து வைத்தார்.

சென்ற 28-3-33ந் தேதி மாலை 6 மணிக்கு ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்க வாசகசாலைத்திறப்பு விழா ஈரோடு லார்டு நேப்பியர் வீதி முனிசிபல் லென்பலசரக்குக் கடைகளின் மேன்மாடியாகிய சங்கக்கட்டிடத்தில் நடைபெற்றது. அவ்வைபவத்திற்கு உள்ளூர் பிரபல ஸ்தர்களும், கௌன்சிலர்களும், வியாபாரிகளும் மற்றும் பொதுமக்களுமாகசுமார்500 பேர்களுக்கு மேலாகவே விஜயம் செய்திருந்தார்கள். அவர்களில் மூக்கியமானவர்கள் தோழர்கள் ஈ. வி. இராமசாமி, ஈ. வி. கிருஷ்ணசாமி முனிசிபல்கௌன்சிலர், கான்சாஹிப் கே. ஏ. ஷேக்தாவுது சேர்மன், ஈ. வி. நஞ்சப்ப செட்டியார் வைஸ் சேர்மன், எம். சிக்கையா முன்சிபல் கௌன்சிலர், ஈ. ஒ. சி. முத்துச்சாமிக் கவுண்டர் முனிசிபல் கௌன்சிலர், ஈ. எஸ். கோவிந்தசாமி நாயுடு முனிசிபல் கௌன்சிலர், எஸ் மீனாக்ஷிசுந்தர முதலியார். பி. எ. எல். டி. ஹெட்மாஸ்டர் மகாஜன ஹைஸ்கூல், எஸ். ராமசாமி நாயக்கர் மண்டி, பெருமாள் நாயுடு பலசரக்கு வியாபாரம், இராமசாமி முதலியார் செக்ரட்டரி ஈரோடு முனிசிபாலிட்டி, அ.ரத்தினசபாபதி ஆர்.அன்னபூரணி, கணேச மூர்த்தி, ராஜகோபால் பி.எ., மயில்சாமி, பத்திரையா, ரத்தினசாமி சென்ட்ரல் பிரஸ் சொந்தக்காரர், சுப்பரவுத்து, வியாபாரம், வெங்கிடுசாமிரவுத் பலசரக்குவியாபாரம், எம். ஏ. ஈஸ்வரன், டாக்டர் எம். கிருஷ்ணசாமி சங்கத்தலைவர், ஈ. வி. ஜெயராம், ஈ. வி. ராமசாமி, எம். ஷண்முகம், ஆர். வெங்கடாசலம், எம். கிருஷ்ணசாமி, சங்கக்காரியதரிசிகள் எச். பாக்ஷா டி. டி. கோபால், வரதப்பன், கரிவரதசாமி, கேசவலால் காளிதாஸ் முனிசிபல் கௌன்சிலர், பாலு, சுக்கூர் ஆகிய இன்னும்பலர் விஜயம் செய்திருந்தார்கள். விழாவிற்கு சங்கத்தலைவர் தோழர் டாக்டர் எம். கிருஷ்ணசாமி அவர்கள் கரகோஷத்தினிடையே தலைமை வகித்து முகவுரையாக சங்கத்தின் கொள்கைகளை விளக்கிக்கூறிவிட்டு சேர்மென் தோழர் கான் சாஹிப் கே. ஏ. ஷேக்தாவுது அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுக்கும் படி காயதரிசிகோபால்அவர்களைகேட்டுக் கொண்டார். பின் காரியதரிசி தோழர். டி. டி. கோபால் அவர்கள் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுத்தார் பின் கான்சாஹிப் ஷேக்தாவுது அவர்கள் பலத்தகர கோஷத்தினிடையேயெழுந்து சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளையும், அது செய்துள்ள வேலைகளையும், விரிவாக எடுத்துக் கூறுகையில் குறிப்பிட்டதாவது:—

தலைவரவர்களே! கனம் ராமசாமி பெரியாரவர்களே!! இங்கு கூடியிருக்கும் கனவான்களே! இந்த சுயமரியாதை வாலிபர் சங்க வாசகசாலையை திறந்துவைக்கும்பெருமையை எனக்களித்ததற்காகவும், என்னைப்புகழ்ந்துவரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுத்ததற்காகவும் நான் நன்றி செலுத்துகிறேனென்றுகூறி சுயமரியாதை இயக்கமானது தோழர் ராமசாமி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதும், அது இந்த தமிழ்நாட்டில் செய்துள்ளவேலைகளையும் நான் நன்குயறிவேன். அவ்வியக்கம் ஒன்று இல்லாதிருக்குமானால் இன்று நம் தமிழ்நாடு மாத்திரமல்ல, இந்திய அரசியல், சமூகஇயல் நிலைமைகளே அடியோடு வேறுவிதமாகவே இருந்திருக்கும்.

படித்த வகுப்பாரான ஒரு கூட்டத்தாருடைய ஆதிக்கமே எங்கும் நிறைந்து பெரும்பான்மையான மக்களுள் சுயமரியாதை இன்னதென்றே தெரியாமல் தாழ்ந்த நிலையிலேயே இருந்திருப்பார்கள். சுயமரியாதை இயக்கம் வாலிபர்களுக்கு மாத்திரமல்லாமல் பெரியவர்களுக்கும் ஒருஉணர்ச்சியைகொடுத்திருக்கிறது

ஆனால் என்னைப்பொருத்தவரையில்நான் சுயமரியாதை இயக்கத்தின் கொளகைகள் முழுவதும் அறிந்தவனென்றோ அதைபெல்லாம் சரியாய் பின்பற்றிவருகிறவனென்றோ சொல்லிக்கொள்ள அருகனல்ல. சுயமரியாதை இயக்கத்தின்பேரால் சொல்லிக் கொள்ளப்படுகின்றபலகொள்கைகளை அனுஷ்டிப்பதற்கு எனக்குப்போதியதைரியமும் இல்லை. இதற்குக்காரணம் அவற்றைநன்றாய் ஆராய்ந்து பாராததோ அல்லது அவ்வியக்கக்கர்த்தாக்கள் சரியானபடி எனக்குஎடுத்துச்சொல்லி திருத்தாதகாரணமோ என்றுதான் நினைக்கிறேன். எப்படி இருந்தபோதிலும் இதுவரை செய்துவந்த வேலையினால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஏழை மக்களுக்கும் அது உதவி செய்திருப்பதுடன் அவர்களது பின் வாழ்வுக்குதைரியத்தையும் ஊட்டுவதாயிருக்கின்றது. இனியும் இந்த இயக்கம் நிதானமாகவும் ஒற்றுமையாகவும் சாவதானமாகவும் வேலைசெய்தால் எல்லாமக்களுக்கும் அரசாங்கத்திலும் சமூகத்திலும் பணவிஷயத்திலும் நல்ல பலனை உண்டாக்கும் என்பதில் எனக்குத்தைரியமுண்டு. என்போன்றவர்கள் இதற்குஎவ்வளவு தூரம் ஒத்துழைத்து உதவி செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்யத்தயாராயிருக்கிறோம் என்பதைத்தெரிவித்துக்கொள்ளுகிறேன். கடைசியாக எனக்கு இந்த கௌரவத்தையைகொடுத்த உங்களுக்குமறுபடியும் எனது வந்தனத்தைத்தெரிவித்துக்கொண்டு இச்சங்கத்தை திறந்துவைக்கிறேன் என்று குறிப்பிட்டு சங்க வாசகசாலையைத் திறந்துவைத்தார். பின் தோழர் மீனாக்ஷிசுந்தரம் அவர்கள் "வாலிபர்" கடமை என்பது பற்றிவிரிவாகவும், விளக்கமாகவும், பேசினர்.

தோழர் ஆர். அன்னபூரணி அவர்கள் "சுயமரியாதை" இயக்கம் செய்தவேலைகள் என்பதுபற்றி பேசினர்,

தோழர் ஈஸ்வரன் அவர்களும் அதைத்தழுவி பேசினர். கேசவலால் அவர்களும் பேசினர்.

பிறகு தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் பெருத்த கரகோஷத்தினிடையே எழுந்து சுயமரியாதை இயக்கம் செய்தவேலைகளையும், இனி செய்யவேண்டிய வேலைகளையும் விளக்கமாகக் கூறியாவரும் சங்கத்தில் அங்கத்தினர்களாக சேரும்படி கூறிவிட்டு சங்கத்திற்கு முனிசிபல் கட்டிடத்தை வாடகைக்கு கொடுத்ததற்காக முனிசிபல் சேர்மன் அவர்களையும், முனிசிபல் அங்கத்தினர்களையும் மற்ற பலசரக்குக் கடைக்காரர்களையும் பாராட்டுவதாகவும்கூறினர். தலைவர் முடிவுரை கூறியபின் சங்கஅங்கத்தினர் தோழர் அ. இரத்தினசபாபதி அவர்கள் வந்தனோபசாரம்கூறியபின் கூட்டம் கலைந்தது.

நாகை மகாநாட்டிற்கு வர வேண்டு கோள்.

நாகையில் நடைபெறும் தஞ்சை ஜில்லா 3வதுசுயமரியாதை மகாநாட்டிற்கு யாவரையும் வந்து கலந்து கொள்ளும் படிதிருவாரூர் எஸ். இராம மூர்த்தி நீண்டகட்டுரை ஒன்று வரைந்தனுப்பியிருக்கிறார்.

ஆர். கே. ஷண்முகத்துக்கு பாராட்டு விருந்து.

இந்திய சட்டசபைத் தலைவர் தோழர் ஆர். கே. ஷண்முகத்துக்கு சட்டசபை அங்கத்தினர்கள் ஒரு பொரியவிருந்து நடத்தினர்கள். அவ்விருந்துக்கு ராஜாங்கசபை அங்கத்தினர்கள், இந்திய சட்டசபை அங்கத்தினர்கள், சிவில், மிலிட்டரி அதிகாரிகள், வைசிராய், நிர்வாக சபை அங்கத்தினர்கள் மற்றும் பல பிரபல ஸ்தர்கள் இவர்களது மனைவிகள் முதலியவர்கள் வந்திருந்து பாராட்டிப்பேசினர்கள்.

ஆர். கே. ஷண்முகத்திற்கு சேலத்தில் பாராட்டு.

23-3-33ல் நடைபெற்ற சேலம் தாலூக்காபோர்டு கூட்டத்தில் இந்தியசட்டசபைத்தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதையும், அடுத்தமாதம் சேலத்திற்கு வரும்போது தாலூகா போர்டார் ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

குடியாத்தத்தில் ஆர். கே. ஷண்முகத்திற்கு பாராட்டு

சென்றவாரம் நடந்த குடியாத்தம் தாலூகாபோர்டு கூட்டத்தில் "இந்தியசட்டசபைத் தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்களைப் பாராட்டி, அப்பாராட்டுதலை தோழர் ஷண்முகம் அவர்களுக்கு தந்திகொடுக்க வேண்டுமென்று தீர்மானம்நிறைவேறியதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

லெனின்

நாகனம்பட்டி கிராமத்தில் தோழர் எஸ். எம். மணி அவர்களுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்கு லெனின், என பெயரிடப்பட்டிருக்கிறது. [ஒரு நிருபர்]

மதுரை ஜில்லா முதலாவது சுயமரியாதை மகாநாடு

—:0:—

1933-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 16-ஞாயிற்றுக்கிழமை மதுரை விக்டோரியா எட்வர்டு ஹாலில் சென்னை பச்சையப்பன் கல்லூரி ரிட்டயர்டு புரொபசர் பி. லட்சுமி நரசு பி. ஏ. அவர்களது தலைமையில் நடைபெறும். மற்ற விபரம் அடுத்தவாரம் தெரிவிக்கப்படும்.

வி. எஸ். ஆனந்தம், வரவேற்புகழகத்தலைவர்.
விளம்பர அதிகாரி.

எஸ். தியாகராஜன்,

சினை ஜப்பான் யுத்த இரகசியம்.

காந்தியும், விஞ்ஞான சாஸ்திரமும்

சகீலத்வாலாவின் பேருரை.

பார்லிமெண்டில் முனைல் பொதுவுடமைக் கட்சி அங்கத்தினராயிருந்த மிஸ்டர் எஸ். சகீலத்வாலா சென்ற வாரத்தில் மான்செஸ்டர் சர்வகலாசாலை சங்கத்தில் "ஏகாதிபத்தியத்தினை தீங்குகள்" என்ற பொருள்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அவ்வமயம் அவர் கூறியதாவது:—

"ஆக்ஸ் போர்ட்யூனியன் சங்கத்தில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஏகாதிபத்தியத்தினால் தீங்குகள் ஏற்படுகின்றனவென்று நிரூபித்துவிட்டது. சென்ற முன்னூறு வருஷகாலமாக ஒருபிரிட்டிஷ் பிரஜையாவது தேசத்தின் நன்மைக்காகப் போர் புரியவில்லை. ஆனால், முதலாளிகளின் தூண்டுதலின் பேரிலேயே அவர்கள் போர் புரிந்திருக்கின்றனர். ஜப்பானியருக்கும், சீனருக்குமிடையில் நடைபெறும் யுத்தத்தைப்பற்றி ஒருவரும் நன்றாக அறிந்து கொள்ளவில்லை. ஜப்பானியர் சீனருடன் யுத்தம்செய்யவில்லை. ஆனால், சீனாவைக் கொள்ளையிடும் பொருட்டு தற்சமயம் ஆங்கிலோ ஜப்பானிய யுத்தம் நடைபெறுகிறது. இந்த யுத்தம் நடைபெறுமென்று முன்னாலேயே அறிந்துகொண்டு இரும்புச் சாமான்களை விற்கப்படுவதாக நடித்து பிரிட்டன் ஜப்பானுக்குக் கப்பல்களை விற்பனை செய்திருக்கிறதென்று நாம் ஒரு பத்திரிகையிலிருந்து அறிகிறோம். பிரிட்டிஷ் யுத்தத் தளவாடங்களின் உதவியினாலும் பிரிட்டிஷ் பண உதவியாலும் ஜப்பான் சீனாவை நாசஞ்செய்கிறது. சீனா சோவியத் நாடாக மாறுவதைத் தடை செய்வதற்காகவே சீனாவுக்கு விரோதமாகப் பிரிட்டன் ஜப்பானுக்கு உதவிசெய்கிறது.

ஜப்பானியருக்கும் சீனருக்கு மிடையில் சமாதானம் ஏற்படுத்த முயற்சி செய்வதாக பிரிட்டன் நடிக்கிறதேயொழிய ஜப்பானுக்கும் சீனாவுக்குமிடையில் சமாதானம் நிலவ வேண்டுமென்று பிரிட்டன் விரும்பவில்லை. சீனாவில் பிரவேசிக்கும்படி ஒருபிரிட்டிஷ்தளகர்த்தர் ஜப்பானிய யுத்தப் படையைத் தூண்டியிருக்கிறார். மேலும், சீனர்கள் சீனாவைக்கைக்கு அப்பால வந்தால், அவர்களைச் சுட்டுக்கொல்லுவதாக அவர் அறிவித்திருக்கிறார். இந்தியப் பிரச்னையையாவது வேறெந்தப் பிரச்னையையாவது தீர்ப்பதற்குக் காந்தியால் முடிய வில்லை. அவர் ஒரு கர்நாடகப் பேர்வழி. மனிதர்கள் குரங்குகளைப்போல் நடித்த பழைய காலத்தையே அவர் ஆதரிக்கிறார். விஞ்ஞான சாஸ்திரப் பொருள்களின் உதவியினால் மனிதர்களாவதை செய்பவர்களை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக விஞ்ஞான சாஸ்திரத்திற்கும், முன்னேற்றத்திற்கும் விரோதமாக அவர் போராடுகிறார்."

"வீரகேசரி"

ஜலகண்டாபுரம் சமதர்ம சங்கம்.

28-3-33 தேதி ஷை சங்கத்தில் ஒரு கூட்டம் கூடியது. அவ்வமயம் வைதீகப் புரட்டு, பார்ப்பனப் பத்திரிகைகளும், ஆர். கே. ஷண்முகமும் தீண்டாமையின் கொடுமை என்பது பற்றி பல தோழர்கள் மிகஉருக்கமாய்ப்பேசிய பின், தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் இந்திய சட்ட சபைத்தலைவராக போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக மகிழ்ச்சியுறுகிறதுடன் இந்திய சட்டசபை அங்கத்தினர்களையும் பாராட்டுகிறதென ஒரு தீர்மானம் நிறைவேறிய தென சங்கக்காரியதரிசி அறிவிக்கிறார்.

தோழர் கேசவப்பிள்ளை மரணம்.

திவான் பகதூர் பி. கேசவப்பிள்ளை 27-3-33ந்தேதி இரவு குத்தியில் காலமாய்விட்டார்.

(ஒரு நிருபர்)

மதுரை முனிசிபல் உபதலைவர் தேர்தல்.

மார்ச்சு 29 தேதியில் நடந்த உபதலைவர் தேர்தலில் தோழர்கள் முருகக்கோனாரும், மாணிக்கவேலு நாடாரும் போட்டி போட்டதால், தோழர் மாணிக்கவேலு நாடார் அதிகப்படியான ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். [ஒரு நிருபர்]

கொச்சியில் சுயமரியாதை மகாநாடு.

கொச்சியைச்சேர்ந்த திருச்சூர் தாலூக்கா எனமாரி, பெருங்கோட்டுக்கர என்கின்ற பருதியில் எப்ரல் மீ 11 ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை சுயமரியாதை மகாநாடு நடைபெறும்தோழர் ஈ.வெ.இராமசாமிதலைமை வகிப்பார் மகாநாட்டுக்கு கொச்சி சகோதரன் பத்திராதிபர் கே. ஐயப்பன் எம். எல். சி. அவர்களும், தோழர் வக்கில் எம். சி. ஜோசப் பி. ஏ.பி.எல்அவர்களும் தோழர்ராம வர்மதம்பான் பி. ஏ. அவர்களும், தோழர் கே. எம். மகமது இப்ராகிம் எம். எல். சி. அவர்களும் விஜயம் செய்வார்கள் என்று கொச்சி சுயமரியாதை சங்கக்காரியதரிசி சக்கேமடத்து தோழர் வேலு தெரிவிக்கிறார். இப்பகுதிகளிலுள்ள பல ஊர்களுக்கு களை மேற்கண்டவர்களுடன். 3, 4 நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

திருவாங்கூர்.

நாகர்கோவிலை அடுத்த இரவிபுதூரில் ஒருவாசகசாலையின் 8-வதுஆண்டுவிழா 12-1-33 ந்தேதி புதன்கிழமை நடைபெறும்தோழர்ஈ.வெ.ராமசாமி, கே. வி. தழுகர்சாமி அ. பொன்னம்பலம் முதலியவர் செல்லுவார்கள்.

சுதேச ஜவுளி வர்த்தகசங்க ஆண்டுவிழா.

ஆர். கே. ஷண்முகம், தலைவர்

ஈரோடு சுதேசஜவுளி சங்கத்தின் மூன்றாவது ஆண்டுவிழா கொண்டாட்டம் எப்ரல் கடைசிவாரத்தில் நடைபெறும். அவ்விழாவுக்குஇந்திய சட்டசபைத்தலைவர்தோழர் ஆர்.கே. ஷண்முகம் பி.ஏ. பி.எல். அவர்கள் தலைமைவகிக்க அன்புடன் இசைந்துள்ளார். அவ்விழாவைதுவக்குவதற்கு ஈரோடுஅர்பன்பாங்கு பிரசிடெண்டு தோழர்எம். சிக்கய்யா அவர்கள்அன்புடன்இசைந்துள்ளார் மற்றும் தோழர்கள்திருச்சி கே.எம்.பாலசுப்ரமணியம் பி. ஏ. பி. எல்., எஸ். நீலாவதி அம்மையார், ஈரோடுதோழர் எஸ். டீஜு சுந்தரம் பி. ஏ. எல். டி. முதலியவர்கள் உபன்யாசம் செய்யக்கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வருஷ ஆண்டுவிழாவை சிறப்பாக நடத்த சங்க நிர்வாகிகளும், அங்கத்தினர்களும் ஆசைப்பட்டிருக்கிறார்கள். என காரியதரிசி அறிவிக்கிறார்.

ஆண்டுவிழா.

ஈரோடு லண்டன் மிஷன் போதனாமுறைப்பாடசாலை வருடப்பூர்த்தி விழாவானது 25-3-33ந்தேதி லண்டன்மிஷின் காம்பவுண்டில் ஈரோடு முனிசிபல் சேர்மென் தோழர் கான் சாஹிப் கே. எ. ஷேக்தாவுத் பகதூர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தது.

படிப்பிலும், விளையாட்டிலும்தேறிய பிள்ளைகளுக்கு தோழர் எச். எ. பாப்பிளி ராைஅவர்கள் மனைவியாரால் பரிசு வழங்கப்பட்டது. காலையிலும், மாலையிலும் தோழர்கள் கே. ஜி. சிவசாமி அய்யர், ராஜாயகம், சர்க்குணம், பாப்பிளி ஆகிய பல பிரமுகர்கள் உபன்யாசம் செய்தார்கள். உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் பலரும், பலபெண்களும், மாணக்கர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

டிரைவர் அண்டு கண்டக்டர் யூனியன்.

25-3-33 ல் சனிக்கிழமை தோழர் வி. சாமிநாதன் அவர்கள் தலைமையில் மேற்படி, கூட்டம் கூடியது. அந்த சமயம் பல தோழர்கள் சங்கத்தின் அவசியத்தைப் பற்றிப்பேசினார்கள். முடிவாய் சங்கத்தின் பெயர் டிரைவர் அண்டு கண்டக்டர் யூனியன் என்றும், இருப்பிடம் நாகப்பட்டண மெனவும், தலைவர் எஸ். பி. சிதம்பரம் என்றும், உபதலைவர்கள் நடேசன், கே. அழகிரிசாமி என்றும், பொக்கிஷதார் ஆர். வி. கோபாலன் என்றும், உபகாரிய தரிசிகள் பி. எஸ். சீனிவாசபிள்ளை, ஆர். வெங்கட்டமுதையர் என்றும், மற்றும், பல 15 நிர்வாகிகளும், தேர்ந்தெடுக்கப்பட்டனரென காரிய தரிசிகளான ஆர். வி. கோபாலன், ஆர். வெங்கட்ட முதையர், பி. எஸ். சீனிவாசன் அறிவிக்கின்றனர்.

தானியேல் டேவிட் ஞாபகார்த்தமான எட்டாவதாண்டு வாலிபர்தாட்டப் பந்தயம்.

இந்தப் பந்தாட்டத்தில் இம்மாகாண எல்லாப்பள்ளிக்கூடமாணவர்களும், இளைமெம்பர்களும் சேரலாம்.

பிரவேச கட்டணம் ரூ2-0-0 உடனே விண்ணப்பம் அனுப்பவும்.

புதுமைய விளையாட்டு எப்ரல் 2வது வாரத்தில் துவக்கப்படும். எப்ரல் 8ந்தேதி யோடுதினு முடியும்.

ஜெயித்தவர்களுக்கு ஒரு பெரிய வெள்ளிக்கிண்ணம் கொடுத்து வைக்கப்படும். இருமுறைதொடர்ந்து ஜெயித்தவர்களுக்கு அது சொந்தமாகும்.

கடைசியில் வெற்றிபெற்றவர்களுக்கு பதக்கம் கொடுக்கப்படும்.

எஸ். ஆறுமுகம்,
காரியதரிசி

வடிவேல் போக்குவரத்து கம்பெனி சார்பாக எஸ். ஆறுமுகம், இந்தப்பரிசை உபாத்தியார்.

எல். எம். பாப்பிளிக்கூடம்
ஈரோடு

குடி அரசு.

ஞாயிறு 1933 ஏப்ரல் மீ 2-ல

சைனு-ஜப்பான் யுத்தம்.

——:0:——

சைனாவுக்கும் ஜப்பானுக்கும் சுமார் ஒன்றரை வருஷ காலமாக யுத்தம்நடைபெற்றுவருகின்றது. இதுவரை யுத்தத்தில் லட்சக்கணக்கான மக்கள் மடிந்து விட்டார்கள். பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிந்தும் விட்டன.

இந்த யுத்தத்தின் தத்துவம் "வலுத்தவன் இளைத்தவனை உதைத்து அவனிடமிருப்பதை பிடுங்கிக்கொள்ளலாம்" என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

சம்மைப் பொருத்தவரையில் சீனாவை சீனக்காரனுண்டாலும் சரி, ஜப்பான்காரனுண்டாலும் சரி, இதில் ஒன்றும் நமக்குபிரமாதமான கவலையில்லை. ஆனால் இதில் கண்டிப்பும் சூழ்ச்சிகள் ஒழிக்கப்படவேண்டியதாகும்.

சர்வதேச சங்கம் என்று ஒன்றிருப்பது யாவருக்கும் தெரியும். அது "உலக சமாதானத்துக்காக இருந்து வருகிறது" என்றுசொல்லப்படுவதாகும். எப்படியென்றால் 1914-ல் ஏற்பட்ட பெரிய யுத்தத்தின் பயனாய் அநேக உயிர்ச்சேதங்கள் பொருள்சேதங்கள்ஏற்பட்டு உலக மொத்தஜனங்களுக்கும் அதிகமான கஷ்டங்களைக் கொடுத்துவிட்டதால் "இனி ஒருவருக்கொருவர் நாடு பிடிக்கும் ஆசைகொண்டு யுத்தம் செய்து கொள்ளக் கூடாது" என்பதற்காகவே ஏற்பட்டதாம்.

ஆனால் இதை நாம் ஒரு காலும் சரி என்று ஒப்புக் கொள்வதில்லை. எனெனில் ஒரு தேசத்தை மற்றொரு தேசத்தாரு ருவர், ஒருவன் அதிக பூமி வைத்துக்கொண்டு மற்றொருவனுக்கு சிறிய பூமியை விட்டு அத்துடனேயே அவனை இருக்கச் செய்வதும், ஒருகாட்டிற்குஅதிக சௌகரியமும் ஒரு காட்டுக்குச் சௌகரியக் குறைவும் இருப்பதும் ஆகியவைபான இப்படிப்பட்ட நிலையில் "இனி ஒருவருக்கொருவர் நாடு பிடிக்கும் ஆசையில் சண்டை பிடிக்கக்கூடாது" என்று தீர்மானம் செய்து கொண்டால் அது சிறிய நாடுகளுக்கும், ஒருகாலத்தில் தோல்வியடைந்து தனது நாடுகளை விட்டு விரட்டப்பட்ட நாடுகளுக்குமே, அன்னியன் ஆதிக்கத்தில் சிக்குண்டு அடிமைப்பட்டுத் தவிக்கும் நாடுகளுக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும். பிறநாட்டானிடம் சென்று தங்கள் குறைகளை எடுத்துச்சொல்லி விடுதலை பெறுவதற்கும் இடமில்லாமல் போய்விடும்.

ஆதலால் இது சூதாடிகள் தங்கள் சூதாட்ட முடிவில் ஜெயித்துக்கொண்டவர்களும் தோற்றுவிட்டவர்களும் சேர்ந்து "இனிமேல் நாம் யாவரும் சூதாடக்கூடாது" என்று ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டால் எப்படி அது ஜெயித்தவர்களுக்குத்தான் லாபமாகவும் தோற்றவர்களுக்கு நஷ்டமாகவும் இருக்குமோ அதுபோன்ற ஒப்பந்தமேயாகும். அப்படியிருந்தும் அந்தப் டி. ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டபிறகாவது அது நிரமமாய் நடைபெறுகின்றதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. எப்படியெனில் இப்போது சைனுதேசத்தை ஜப்பான் தேசம் தாக்குதுத்தி யுத்தத்தில் ஜெயிக்கப்பார்க்கிறது. இதற்கு ஜப்பான் சொல்லும் காரணம் "எனது ஜனத்தொகை அதிகமாய் விட்டது. தொழில் நிறமையில் நான் மேன்பாடடைந்து விட்டேன். எனக்கு இன்னும் அதிகமான நிறைமுகங்கள் வேண்டும். ஆதலால் சைனுவைக் கைப்பற்ற வேண்டியிருக்கிறது என்கின்ற காரணமே ஒழிய வேறில்லை", என்கின்றது.

இதை பிரிட்டிஷ் பத்திரிகைகளில் சிலது ஆதரித்தும் எழுதுகிறது. அதாவது "ஜப்பான் தேசம் தனது திருக்கியாதும் அடக்கி ஏற்பட்ட பூகம்பத்தினால் களாலும் நிகவும் கஷ்டப்படுகிறது. இதற்கு எதாவதொரு வழிபண்பட்டுத்தானாகவேண்டும்" என்று எழுதியிருக்கிறது.

இதுதான்ஜப்பானின் நிலைமை. ஆனால் சர்வதேச சங்கம்தங்களது ஒப்பந்தங்களை மீறி ஜப்பான்கடந்ததற்கு என்ன செய்தது என்று பார்ப்போமானால் எழுத்தில் ஜப்பான ஊரார் மெப்புக்கு பொய் மிரட்டு மிரட்டுவதும் காரியத்தில் ஜப்பானுக்கு வேண்டிய ஆயுதங்களைக் கடனாக என்று கொடுப்பதும், ராணுவ்வீரர்களை ரகசியமாயனுப்புவதும் சண்டைக்கு வேண்டிய சண்டைக் கப்பல் சண்டை ஞானம் முதலியவைகளை ரகசியமாய் உதவுவதுமாயிருக்கின்றதாம்.

இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் "சைனுவைஜப்பான் கைப்பற்றி விட்டால் அது ஆங்கில சென்னாக்காரும் அமெரிக்காரும் சைனு முழுவதும் பொதுவுடைமை தேசமாகிவிடும்" என்றும் "அப்போது மற்ற தேசங்கள் எல்லாம் வலிய வந்து பொதுவுடமையை சரணமடைய வேண்டி எற்பட்டு விடும் என்றும் சர்வதேச சங்கமும் சிறப்பாக பிரிட்டனும் கருதுகின்ற காரணமேயாகும்.

ஆகவே சர்வதேச சங்கம் இப்பொழுது எதற்கு என்னமாயிருக்கின்றது என்று பார்த்தால் அது முதலாளிகளின் கூட்டுறவுச் சங்கமாகவும், எழைகளை வஞ்சித்து வதைக்கும் சதிகார சங்கமாகவும் தான் இருக்கின்றது.

இதில் தலை சிறந்து விளங்குவது பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மென்பதே பொதுவுடமைக்காரர்களின் முடிவு. அதுவேஉண்மையுமாகும். மற்ற ஜாதிகளும் பொதுவுடமையை எதிர்க்கவோ ஒழிக்கவோபிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத்தான் தூண் போல நம்பியிருக்கின்றது. இங்கிலாந்தும், இந்திய முதலாளிகளும், இந்தியசமஸ்தானங்களும், இந்திய அரசியல் கிளர்ச்சிகளும் பிரிட்டிஷாருக்கு அடிமையாகவும் பிரிட்டிஷ் கொள்கைகளைப் பின்பற்றுபவனாகவும் பிரிட்டனைப் போலவே பொதுவுடமைக்கொள்கையை வெறுப்பாகவும் இருப்பதால் இந்தியாவுக்கு என்ன அதிகாரம் என்ன சுதந்திரம் கொடுத்தாலும் தங்களுக்கு அழிவு வாதனைகின்ற நிச்சயம் பிரிட்டிஷாருக்கு இருப்பதால்—இந்திய ஆகாயத்தில் பிரிட்டிஷாரும் உலகில் ஒரு பெரியவல்லரசாக இருந்து சர்வதேச சங்கத்தை ஆட்டி வைக்கின்றது. பிரிட்டிஷ் பார்த்து உண்மையான முறையில் ஒரு மிரட்டு மிரட்டியிருக்குமானால் ஜப்பான் கடுகடுங்கி யுத்தத்தை விட்டு மன்னிப்புகூட கேட்டிருக்கும். ஆனால் பிரிட்டிஷானது அப்படிச் செய்வதற்கு பதிலாக ஜப்பானுக்கு யுத்தக்கப்பல்கள், தளவாடங்கள், தளகர்த்தர்கள், பணம் ஆகியவைகளை சப்ளை செய்கிறது எனலும், இன்று சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் சைனுவுடன் ஜப்பான் சண்டை செய்யவில்லை என்றும் பிரிட்டிஷ்தான் ஜப்பான மூலம் சண்டை செய்கின்றது என்றும் சொல்லத் தக்க மாதிரியில் லண்டனிலேயே சேதிகள் வெளியாகின்றன. இதை நம்பாமல் இருக்க போதிய காரணம் இல்லை.

இந்த சண்டைக்குப் பெயர் சீனு ஜப்பான் சண்டை என்றோ, பிரிட்டிஷ் சைனு சண்டையென்றோ சொல்வதையெல்லாம்விட்டு முதலாளி தொழிலாளி சண்டையென்று சொல்லுவதுதான் சரியான பெயர் என்பது நமது கருத்து.

நிற்க, இந்திய தேசியமும் சீனு ஜப்பான் சண்டையை முதலாளி தொழிலாளிச் சண்டை என்று அறிந்து கொண்டதிலேயே அதைப்பற்றி காதிலேயே போட்டுக்கொள்ளாமல் தனது முதலாளித்தனத்தைக் காப்பாற்ற யாருக்கோ வக்காலத்து போல் கடித்துக்கொண்டிருக்கின்றது.

இது விஷயத்தைப்பற்றி சோழூர் சக்கரவர்த்தி அவர்கள் பேசியிருக்கும் பேச்சை மற்றொரு பக்கத்தில் காணலாம். அதிலிருந்து சீனு ஜப்பான் யுத்த ரகசியமும், பிரிட்டிஷ் நிலைமையும், இந்தியத் தேசியத் தலைவராகிய தோழர் காந்தியின் நிலைமையும் ஒருவாறு விளங்கும். மற்ற விபரம் பின்னல் எழுதுவோம்.

——

மாரியம்மன்.

வரவேற்கின்றோம்.

மக்கள் மாரியம்மன் பண்டிகையின் பேரால் காட்டுமிராண்டித்தனமாக தப்புகளைக்கொட்டிக் கொண்டும் மிலேச்ச லம்பாடிகள் ஆடுவதுபோன்ற ஆட்டங்களையும் ஆடிக்கொண்டும் கீழ் மக்கள் கடைப்பதுபோன்ற வேஷங்களைப்போட்டுக்கொண்டும், ஆபாசமான பேச்சுகளைப் பேசிக்கொண்டும், ஆயிரக்கணக்கான ரூபாய்களை பாழாக்கிக்கொண்டும்செய்து வரும் அக்கிரமம் இந்த காட்டில் அறியாதார் யாரும் இல்லை.

இது காலாகாலமாக அதிகமாகின்றதே தவிர மக்களுக்கு அறிவுவந்து இந்த பழமைகால நிலைமை சிறிதாவது மாறி இருக்கின்றதென்று சொல்லுவதற்கே இல்லை.

முழுமுதற் கடவுளென்று சொல்லப்பட்ட விஷ்ணு, சிவன் என்கின்ற கடவுள்களின் "பாடல் பெற்ற ஸ்தல" உற்சவம் பூசை முதலியவைகள் எல்லாம் கூட இப்பொழுது பெரிதும் குறைந்து வருகின்றன. இந்த உற்சவ வருஷங்களும் சரி பகுதிகளும் குறைந்தும் வருகின்றன.

ஒரே கடவுள் என்று சொல்லுகின்ற அல்லாசாமியின் உற்சவம் மூன்று நாளுக்கு மேல் முறைக்கு வருகின்றது. ஆனால் இம்மாரி கருப்பன், காத்தவராயன் என்று சொல்லப்பட்ட "தேற்றத்த பரிவார தேவதைகள் என்று சொல்லப்படும் சாமிகளின் பக்தர்கள் செய்யும் ஆர்ப்பாட்டம் இப்போது அளவுகடையாது. இந்த "தேவதைகளை" வணங்குவதும் இவைகளுக்கு உற்சவம் செய்வதும் கீழ் மக்களாயிருப்பவர்களது செய்கை என்று அனேக சைவ வைணவ பண்டிதர்கள் எழுதி இருக்கின்றார்கள். அன்றியும் மாரி என்றால் என்ன அது ஏப்படிப்பட்ட தெய்வம் அதன் கதை என்ன என்பது யாருக்காவது தெரியுமா? அது அறியாள மக்களால் ஒப்புக் கொள்ளக்கூடியதா? என்று பார்த்தால் அது கடைசியில் சைபராகத்தான் முடியும். இம்மாதிரி அர்த்தமற்றதும் அநாகரீகமானதும் காட்டுமிராண்டித்தனமானதுமான காரியங்களை மதத்தின் பேரால், கடவுள்களின் பேரால் சற்றும் மானவெட்கமில்லாமல் செய்துகொண்டிருக்கின்ற மக்கள் நம்மை நாஸ்திகமென்றும், மத துவேஷி என்றும், கடவுள் துவேஷி என்றும் சொல்லுவது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. இந்த லட்சணத்தில் இந்த மாரியாயி என்கின்ற சாமிகள் ஒரு ஊருக்கு இரண்டு மூன்று இருக்குமிகாண்டு எககாலத்தில் உற்சவம் செய்து சிறுபிள்ளைகளின் புத்தியை மூடமாக்கி அவர்களையும் காட்டுமிராண்டிகள் போல குரங்கும்படி செய்வது மிகவும் அக்கிரமமான காரியமாகும். இதற்கு வியாபாரிகள் என்று சொல்லப்படுவோர்கள் கடைகளைக்கு 10-ம் 5-ம் கொடுத்து இதை வளர்ப்பது என்பது அதிமூடத்தனமும் அக்கிரமமானகாரியமாகும்.

மற்றும் இப்படிப்பட்ட காரியங்கள் பொது ஜனங்கள் சுகாதாரத்திற்கு எவ்வளவு கெடுதி என்றும் கட்சிப்பிரதி கட்சிகளால் பொதுஜன அபிமதிக்கு எவ்வளவு பங்கம் என்றும், நாம் எடுத்துக்காட்டவேண்டியதில்லை.

உதாரணமாக ஈரோட்டில் 3 மாரியம்மன்கள் உண்டு. இவைகள் கடகியில் லாமல் நடந்த காலம்மை அருளால் ஒவ்வொரு கோவிலும் ஊருக்குள் வீடுகளுக்கு மத்தியில் இருக்கின்றது. உற்சவ காலத்தில் இரவு எல்லாம்பப்புக்கொட்டுவதும் அக்கம் பக்கத்திய ஜனங்களுக்கு தூக்கம் இல்லாமல் செய்து விடுகிறது. இவற்றுள் ஒன்று குழந்தைகள் பெண்கள் ஆண்பத்திரிக்குப் பக்கத்தில் இருந்திவருது. இதற்கும் பெரிய மாரியம்மன் என்று பெயர். இந்த கோவிலில் தப்பட்டை அடிப்பதால் ஆஸ்பத்திரி வியாதியஸ்தர்களுக்கு அதிக தொல்லை உண்டு. ஆகலால் இந்த வருஷம் ஆஸ்பத்திரி நிர்வாகஸ்தர் சர்க்காருக்கு விண்ணப்பம் போட்டு இரவு பத்து மணிக்கு மேல் கோவிலில் தப்புக் கொட்டக்கூடாது என்ற உத்திரவை கோவில் அதிகாரிகளுக்கு சார்வு செய்திருப்பதாய்த் தெரிகின்றது. இந்தப் பெரிய மாரி இந்த உத்திரவு போட்டவர் களையும் கேட்டவர்களையும் என்ன செய்யுமென்பது இனிமேல் பார்க்கக் கூடிய விஷயமானாலும் இந்த உத்திரவை நாம் இப்போது மனமார வரவேற்கின்றோம்.

போலீசுக்கு ஒரு வார்த்தை.

கடைசியாக போலீசுக்கு ஒரு வார்த்தை. இந்த பண்டிகைகளை உத்தேசித்து வாலிபர்களில் பலர் பலவித ஆபாசமான வேஷம் போட்டு பொது ஜனங்களிடம் கொடுக்கும்படி தொந்தரவு செய்வதும் குடித்து விட்டு கண்ட படி தப்புக் கொட்டாடிக்கொண்டு ஆபாசமான வார்த்தைகளைப் பேசிக்கொண்டு நிற்பதுமான காரியங்களை போலீசார் கவனித்து தியூசென்சுக்கு சார்ஜ் செய்வதன் மூலம் இக்காரியங்களைச் செய்தால் யாதானும் வாலிபர்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்படும் என்றும் இப்படிச் செய்வதையும் மனமார வரவேற்போம் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சர்வமத கண்டனம்.

மதப்பிரசாரம்.

மதப் பிரசாரகர்கள் என்பவர்கள் 100க்கு 99பேர்கள் மதத்தைப் பற்றி எங்கோ மூலை முடுக்குகளிலோ அல்லது வேதம் வேதாந்த சாஸ்திரம் என்பதுகளில் உள்ளவற்றை எடுத்து தங்கள் இஷ்டபடி வியாக்கியானம் செய்தோ பிரசாரம் பண்ணிக் காட்டி பாமர மக்களை எமாற்றி தங்கள் தங்கள் கும்பெரிதென்று பேசி சண்டப் பிரசண்டர்களாகிறார்களே ஒழிய அந்த மதத்தை சேர்ந்த 100க்கு 99 முக்கால் பாகமக்களிடத்தில் அந்த மதத்தின் போதல் படுகின்ற காரியங்களைப் பற்றி எடுத்துச் சொல்லி தங்கள் மதத்தின் போக்கியலை யை நிர்ணயிக்கும் யோக்கியர்கள் இன்று மிக மிக அருமையாகவே இருக்கிறார்கள். ஒவ்வொரு மதத்துக்கும் வேதமிருக்கிறது புராணமும் இருக்கின்றது ஒவ்வொரு மதத்திலும் 100க்கு 99 முக்காலரைக்கால் மக்கள் புராணப்படி தான் புராணத்திலுள்ள வேஷத்துக்குறிப்படிதான் நடக்கின்றார்களே ஒழிய வேறில்லை. அதாவது ஒவ்வொரு மதத்துக்கும் தலை மயிரில் மதத்துமும் இருக்கிறது உடையில் மதத்துமிருக்கிறது. ஆகாரத்தில் மதத்துவமிருக்கிறது, மனிதவாழ்க்கைசம்பந்தம், புணர்ச்சி பந்துத்துவமுறை ஆண் பெண் தந்நலம், கல்யாணர், உற்சவம் சொத்துரிமைமுதலாகியவைகளிலும் மதத்தத்துவம் இருக்கின்றது. இவைமாத்திரமல் ஒவ்வொருவரும் தங்கள் கடவுளை ஆகாரம் வைத்து அவ்வார்த்தைகளில் நம்பிக்கை வைத்துத் தான் இவற்றில் அனேகத்தை நிர்ணயம் செய்கின்றார்கள். ஒரு மதத்தை விட்டு மற்றொரு மதத்திற்கு ஜனங்கள் மாறிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மதத்திலும் சீர்திருத்தக்காரர்கள் தினம் ஒரு சீர்திருத்த முறையை பிரசாரம் பண்ணிக் கொண்டு தான் இருக்கிறார்கள் ஒவ்வொரு மதத்திலுமிருந்து விரோதிகள் மத வெறியர்கள் பலாத்காரச் செய்கையை எதிர்பார்த்தே தங்கள் மதத்தைக் காப்பாற்ற வேண்டி இருக்கின்றவர்கள், சமூக தர்மிகள், மகான்கள் இருந்து கொண்டுதானிருக்கிறார்கள். இந்த நிலையில் எந்த மதத்தை மத சம்பந்தமாக நாம் குறை சொல்ல முடியும் என்பது யோசிக்கத் தக்கது.

கேசவபிள்ளை.

தோழர் கேசவபிள்ளையை சென்னை மகாஜன அரசியல் உலகம் என்ன என்பதை அறியும்.

அவர் பழயகாலத்திலேயே காங்கிரசில் சேர்ந்தவர். பழய சட்டசபைகளில் அவர் அதிகம் காரியங்கள் செய்தவர். ஆனால் அவர் பார்ப்பனராய் இல்லாததால் அவரைப்போல வேலை செய்த பார்ப்பனர்களுக்கு கிடைத்த பெருமையும் பயனும் இவருக்கு கிடைக்காமல் போனதில் அதிசயமில்லை. பொதுவாழ்வில் சுமார் 40 வருஷகாலம் கலந்திருந்தும் அவரது வாழ்க்கை ஒரு சாதாரண நிலையிலேயே இருந்தது குறிப்பிடத்தக்கது. மற்ற தலைவர்களைப் போல ஆடம்பரமும் பணவருவாயும் பிரதானமாகதவர் எதிர்பார்க்கவுமில்லை, அவர் எந்த விஷயத்தில் கலை எடுத்து உழைத்தாலும் அதை மனப்பூர்வமாக உணர்ந்து மனப்பூர்வமான அக்கரையுடனும், உண்மையான கலையுடனுமே உழைத்து வந்திருக்கிறாரே ஒழிய பொய்யாகவோ, கூலிக்காகவோ அல்லது எதாவது ஒரு சுயநல பலனை உத்தேசித்தோ உழைத்தவர் என்று சொல்லுவதென்றால் அது சுலபத்தில் முடியாதகாரியமேயாகும். விளம்பரப்படுத்திக்கொள்வதில் அவருக்குப்பிரியம் கிடையாது.

அவருக்கு 'சர்' பட்டம் கிடைத்திருக்கலாம். ஆனால் அதை பார்ப்பனப்பத்திரிக்கைகள் கெடுத்துவிட்டன. ஆனாலும் அவரைப்பற்றிய அபிப்பிராயம் பொதுமக்களுக்கு ஒரே விதத்தில்தான் உண்டு. அதாவது நன்மையான விஷயங்கள்தவிர இன்ன தீமை செய்தவரென்றோ தீமையில் கலந்திருந்தாரென்றோ யாரும் சொல்லுவதற்கில்லை. இப்படியே இவர் 70 வருஷகாலம் ஜீவித்து காலமாயிருக்கிறாரென்றால் இந்தியாவின் நிலைக்கு இதை அற்ப ஆயுள் அல்லது போதாத ஆயுள் என்று சொல்லிவிடமுடியாது. அவருடையகும்பத்தாரும் போதிய அளவுக்கு திருப்திகரமாகவே இருக்கிறதாக அறிகிறதுடன் விவேகிகளானதால், பிரத்தியேக அனுதாபம்கூடதேவை இருக்காதென்றே தருதலிக்கிறோம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி சுற்றுப்பிரயாணம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் 6-3-33தேதி இரவு ஈரோட்டிலிருந்து புறப்பட்டு திருச்சி மார்க்கமாக காலையில் 8, 9-1-33ல் நடைபெறும் தஞ்சை ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டிற்குச்செல்வார் அங்கிருந்து 10ந்தேதி திருவாரூர் சென்று அங்கிருந்து 13ந்தேதி புறப்பட்டு கொச்சிக்கும் சென்று பிறகு அங்கு இரண்டு மூன்று நாள் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு அடுத்த வாரம் ஈரோடு வந்து சேருவார்.

சமதர்மப் பிரசாரம்
தோழர்கள் சுற்றுப்பிரயாணம்.

தோழர்கள் வி. ஜீவானந்தம், ராம சுப்பையா, விசாலாட்சி, அ. பொன்னம்பலம் ஆகியவர்கள் இன்று 30-3-33 முதல்திருப்பத்தூர் திருக்கோஷ்டியூர், சிவகெங்கை, காட்டரசன் கோட்டை, பள்ளத்தூர், கோட்டையூர், புதுவயல், கண்டதூர் முதலிய ஊர்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்காங்கே மாலை நேரங்களில் பொதுக்கூட்டங்கள் கூட்டி "சமதர்மம்" என்பதுபற்றி பேசிவருவார்கள். 7-4-33 இரவு ராகை மகாநாட்டிற்கு புறப்படுவார்கள்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதுமேதான் ஒர் யுத்தகள மாகும்.

கேள்வி:—தனிப்பட்ட சொத்துரிமையை அழித்தகினால் ஏற்படும் முடிவான பலன்கள் என்ன?

பதில்:—இனிமேல் சமூகத்திலுள்ள உற்பத்தி, போக்குவரத்து சாதனம் இவைகளெல்லாம் தனிப்பட்ட முதலாளிகள் தங்கள் சொந்த நன்மைக்காக உபயோகப்படுத்திக்கொள்ள முடியாது.

அரசாங்கமானது சமூகத்தின் (பாடுபடும் மக்களின்) நன்மையையே தன்னுடைய கொள்கையாகக்கொண்டு இவ்விதச்சாதகங்களின் மூலம் ஜனங்களுக்குஉதவியளிக்கும். ஆகவே இச்சாதகங்களைச் சொந்த நன்மைக்காக உபயோகப்படுத்துவதினால் ஏற்படும் தீமைகள் விலக்கப்படும். வியாபார நெருக்கடிகள் ஏற்படாது. முன்னர் கெடுதலாகக்கருதப்பட்ட மிதமிஞ்சிய உற்பத்தியானது சமூகத்தைக் குழப்பத்தில் அழுத்திவிடாமல் சமூகத்தின் அபிவிர்த்திக்குக் காரணமாக இருக்கும்.

இவ்விதமாகவே விவசாய உற்பத்தியிலும் முன்னேற்றமேற்படும். விஞ்ஞானமான முறைகளும் பலமிகுமான முன்னேற்றத்தை உண்டாக்கக்கூடிய விவசாயமுறைகளும்ஒருபுதியவிவசாய உலகத்தையே சிருஷ்டிசெய்து உலகத்தின் தேவைகளை பூர்த்திசெய்து திருப்திப்படுத்தும்.

ஆகவே எல்லா அங்கத்தினர்களுக்கும் திருப்தியாகவும் நியாயமாகவும் பங்கிடக்கூடிய போதிய உற்பத்திப்பொருள்கள் சமுதாயத்தினால் உற்பத்தி செய்யப்படும்.

வகுப்பு விரோதியாசம் ஒழியும். ஒழிவது மாத்திரமல்லாமல் அவ்விதவகுப்புவிரோதியாசங்கள்இந்தப் புதிய சமூக அமைப்பிற்கு முற்றிலும் முரண்பாடானவைகளாக கருதப்படும்.

கைத்தொழிலுக்குமாத்திரம் பங்கிடுவதிலேயே வகுப்புகளேற்பட்டன. அப்பங்கிடுதலானது நிறுத்தப்பட்டவுடன் வகுப்புகளும் மறைந்துவிடும். ஆகவே பொதுவுடமைக்கொள்கைகளைக்கொண்டு நிர்மாணிக்கப்பட்ட சமூகத்தில் எல்லாத் துறைகளிலும் அபிவிர்த்தி ஏற்படும். இவ்வபிவிர்த்தியோடு வகுப்பு உணர்ச்சிகளும் மறைந்துவிடும். ஏனெனில் பொதுவுடமை சமூகத்தில் வகுப்புக்கள் இருக்கமுடியாது.

இவைகளிலிருந்து கிராமத்திற்கும், நகரத்திற்குமுள்ள வித்தியாசங்களும் சீக்கிரத்தில் மறைந்துவிடுமென்றுநாம் அறிகின்றோம்.

பொதுவுடமை சமூகத்தில் விவசாயமும், ஆலை உற்பத்தியும், முன்மாதிரி இரண்டு வகுப்பால் நடத்தப்படாமல் ஒரே சமூகத்தால் நடத்தப்படும். தற்காலத்தில் கிராமங்களிலேயே விவசாய வகுப்புக்களிருப்பதும், பெரும் நகரங்களிலேயே தொழிலாளிகள் கூட்டங்கூட்டமாக வசித்து வருவதும் விவசாயமும் ஆலை உற்பத்தியும் சரியாக அபிவிர்த்தியடையவில்லை என்பதையே காட்டுகிறது. (குறிக்கின்றது)

தனிப்பட்ட சொத்துரிமையை அழித்தலின் பலன்கள் கீழ்கண்டவைகளாகும்.

1 உற்பத்திப் பொருள்களைச் சமூகத்திலுள்ள எல்லா அங்கத்தினர்களும் பொதுவாக சமமாக உபயோகப்படுத்துவதற்காக ஒன்றுசேர்த்தல்.

2. எல்லோருடைய அவசியமான தேவைகளையும் பூர்த்திசெய்யத்தக்கதிலையில் உற்பத்திகளும் தொழில்களும் விஸ்தரிக்கப்படுதல்.

3. ஒரு வகுப்பாரின் உழைப்பிலேயே மற்றொரு வகுப்பாரின் தேவைகள் பூர்த்தியடைந்துவாழ்வதான தற்கால நிலையை அழித்தல்.

4. வருப்புக்களையும் வருப்பு விரோத வித்தியாசஉணர்ச்சிகளையும் அடியோடு அழித்தல்.

5. தொழிற் கல்வியிலும், பொது உழைப்பால் உண்டாக்கப்பட்ட இன்பங்களை சமூகத்திலுள்ள மக்கள் யாவரும் சேர்ந்து அனுபவித்தல்.

நகரமும் கிராமமும் வித்தியாசமின்றி ஒன்றுக்குள் ஒன்று சம்மந்தப்பட்டு சமூகத்தில் அங்கத்தினர்கள் எல்லோரும் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைதல்.

இவைகளே தனிப்பட்ட சொத்துரிமையை அழித்தலினால் ஏற்படும் பலன்களாகும்.

கேள்வி:— குடும்ப சம்பந்தங்களில் இந்தப் பொதுவுடமைக் கொள்கையானது எப்படி இருக்கும்?

பதில்:—ஒரு ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் உள்ள சம்பந்தமானது ஒரு தனிப்பட்ட (அவ்விரு வரையுமே பொறுத்த) சம்பந்தமாகின்றது. இச்சம்பந்தத்தைப்பற்றி சமூகத்திற்கு யாதொரு பொறுப்புமில்லை. இவ்விதநிலையானது தனிப்பட்ட சொத்துரிமையழிக்கப்பட்டதாலும் சிறுவர்களுக்குக்கல்வியானது சமூகத்தினாலேயே கொடுக்கப்படுவதினாலும் சாத்தியமாகின்றது.

இவ்விதமாகவே முற்காலத்திய விவாக சம்பந்தத்தின் அடிப்படையாகக்கருதப்பட்ட தத்துவங்களாகிய ஸ்திரீகள் தங்கள் தன வர்க்கமே தன் ஜீவியத்திற்கு நம்பியிருத்தலும், சிறுவர்கள் அத்தகாதிரித்தங்கள் பெற்றோர்களையே நம்பியிருத்தலுமாகிய இவ்விரண்டும் அழிக்கப்படுகின்றன.

விபசாரம் என்பது தனிப்பட்ட சொத்துரிமையினாலேயே ஏற்பட்டது. ஆகவே அதை அழித்துவிட்டால் விபசாரமும் (Prostitution) நசித்துவிடும்

ஸ்திரீகளை ஆண் சமூகத்திற்குச் சொந்தச் சொத்தாக்கும் கேவலநிலைமையை பொதுவுடமைக்கொள்கைகளினால் நிலவப்பட்ட சமூகமானது அடியோடு அழித்துவிடும்

கேள்வி:— பொதுவுடமைக்காரர்கள் ஜனநாயக அபேதவாதிகளிலிருந்து எவ்விதத்தில் வேறுபட்டிருக்கின்றனர்?

பதில்:—அபேதவாதிகள் என்றழைக்கப்படுகிறவர்களை மூன்று பிரிவாகப்பிரிக்கலாம் (1847)

முதல் வகுப்பானது மான்யப்பிரமாண சமூகத்தையும், நாட்டாண்மைக்கார சம்பந்தங்களையும் கொண்டதுமான வகுப்பையும் அவற்றின்னஞ்சிய சேஷங்களையும் மிக ஆவலுடன் பற்றிக்கொண்டிருக்கும் அபேதவாதங்களைக்கொண்டது. மான்யப்பிரமாண வகுப்பானது பரந்தநிட்டக்கைத்தொழிலினாலும் சர்வதேச வியாபாரத்தினாலும், இவற்றாலுண்டாக்கப்பட்ட முதலாளி சமூகத்தாலும் படிப்படியாக அழிக்கப்பட்டுவருகின்றது. இவ்வகுப்பார் தற்கால சமூகத்திலுள்ள கேடுகளை மாற்றுவதற்குப் பழைய மான்யப்பிரமாண சமூகத்தையே நிரும்பவும் நிலநாட்ட விரும்பினர். இந்தப்பிற்போக்கான அபேதவாதிகள் எழைத்தொழிலாளர்களாகிய ஜனங்களிடம் எவ்வளவு அனுதாபங்காட்டினும், பொதுவுடமையாளர்களால் மிகவும் கடுமையாக எதிர்க்கப்படவேண்டும். ஏனெனில்:—

1. அவர்கள் அடைய முடியாததைப்பெறமுயற்சிக்கின்றனர்

2. அவர்கள் பிரபுக்கள், பெருங்கைத்தொழிலாளர்கள், மான்யப்பிரமாண அரசர்கள் ஆகிய இவர்களின் ஆட்சியைத் திரும்பவும் சமூகத்திலே புகுத்தப்பார்க்கின்றனர்.

4. எழைத் தொழிலாளர்கள் புரட்சி இயக்கத்தை ஆரம்பிக்க விரும்பும் பொழுது அவர்கள் எழைத்தொழிலாளர்களைத் திக்குமுக்காடச் செய்துவிட்டுத் தாங்கள் முதலாளிகளின் கட்சியைச் சேருகின்றனர்.

இரண்டாவது வகுப்பினர் தற்கால சமூகத்தின் மேல் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கின்றனர். அவர்கள் தற்கால சமூகத்திலுள்ள கெடுதல்கள் அச்சமூகத்தையே நாசமாக்குவதற்குக் காரணமாக இருக்குமோ வென்று பயப்படுகின்றனர். ஆகவே அவர்கள் அக்கேடுகளையெல்லாம் விலக்கித் தற்கால சமூக நிலையைப் பலப்படுத்த விரும்புகின்றனர். இவ்விதநோக்கத்தோடு அவர்களில் சிலர் சமூகத்திலுள்ளவர்களின் சௌகரியலாபங்களுக்காகச் சட்டங்களை யுண்டாக்க விரும்புகின்றனர். மற்றும் சிலர் ஒரு குறிப்பிட்ட திட்டத்தோடு பெரும் சீர்திருத்தங்களை விரும்புகின்றனர். சமூகத்தையே புனருத்தாரணம் செய்வதாகச் சொல்லிக்கொண்டு அவர்கள் தற்கால சமூக நிலையை எவ்விதத்திலும் மாற்றாமலிருக்கப்பார்க்கின்றனர். இவ்விதமுதலாளிகள் வகுப்பைச் சேர்ந்த அபேதவாதிகளைப் பொதுவுடமையாளர்கள் இடைவிடாமல் எதிர்க்கவேண்டும். ஏனெனில் இவர்கள் பொதுவுடமையின் விரோதிகளோடு சேர்ந்துகொண்டு பொதுவுடமையாளர்கள் எந்த சமூகத்தை ஒழிக்கவேண்டுமென்று சொல்லுகின்றனரோ அந்த சமூகத்தையே பாதுகாக்கவிரும்புகின்றனர். இறுதியில்,

மூன்றுவது வகுப்பினர் ஜனநாயக அபேதவாதிகளாவர். இவர்கள் பொதுவுடமையாளரின் சில சீர்திருத்தங்களை ஒப்புக்கொண்டபோதிலும் அச்சீர்திருத்தங்களை சமூகமானது பொதுவுடமையாக மாறுவதற்கு வேண்டிய கேவலம் தற்காலிகமான சீர்திருத்தங்களாகக் கருதாமல் அவற்றால் தற்கால சமூகத்திலுள்ள எழ்மைத்தனமும் கஷ்ட நிஷ்டூரங்களும் அழிக்கப்படுமென்று நினைக்கின்றனர். இந்த ஜனநாயக அபேதவாதிகள் தங்களுடைய விடுதலைக்குச் சாதகமாகிய விஷயங்களை இன்னும் சரிவர உணராத எழைத்தொழிலாளர்களாகவோ அல்லது தங்களுடைய சொந்த நன்மைக்காக அடிக்கடி எழைகளோடு சமரசம் செய்துவரும் முதலாளிகளாகவோ இருக்கின்றனர்களை ஒழிய உண்மை சமதர்மத்தில் அவர்களுக்கு இஷ்டமில்லை. ஆகை

ரோஜா முத்தையா

யால் சில நெருக்கடியான சமயங்களில் பொதுவுடமையாளர் இந்த ஜனநாயக ஆபேதவாதிகளோடு சமரசமாகக் கூடித் தங்களுடைய யுத்த சன்னத்தில் அவர்களின் ஒத்துழைப்பையும் காடவேண்டியிருக்கின்றது. ஆனால் இந்த ஜனநாயக ஆபேதவாதிகள் ஆனும் முதலாளிகளின் வகுப்பினிடம் சரணாகதியடையாத வரையில் தான் பொதுவுடமையாளர் அவர்களின் ஒத்துழைப்பை காட முடியும்.

கேள்வி:—நம்முடைய காலத்திலுள்ள (1847) இதர ராஜீயக் கட்சிகளுக்கும், பொதுவுடமையாளருக்கும் உள்ள சம்பந்தம் என்ன?

பதில்:—ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும் பற்பல வித்தியாசங்கள் இருக்கின்றன. இங்கிலாந்திலும், பிரான்சிலும், பெல்ஜியத்திலும், முதலாளிகள் ஆதிக்கமே தழைத்தோங்குன்றதுஆகவேஅவ்விடங்களைச் சேர்ந்த பற்பல ஜனநாயகக் காட்சிகளோடு ஒத்துழைக்கின்றனர். இவ்வொத்துழைப்பானது அந்த ஜன நாயகக் கட்சிகள் (Democratie Parties) எவ்வளவு தீவிரமான ஆபேத வாதத்திட்டங்களை ஒப்புக்கொள்ளுகின்றனவோ அதையே பொறுத்திருக்கின்றது. அதாவது அக்கட்சிகள் ஏழைத் தொழிலாளிகளின் நன்மைக்காகப்போராடும் வரையிலும் பொதுவுடமைக் காரர்கள் அவர்களோடுஒத்துழைப்பார்கள் உதாரணமாக இங்கிலாந்தில் 19வது நூற்றாண்டில் ஏற்பட்டப்பட்ட சக்கஷி (Char tiso) யினரின்இயக்கத்திலீடுபட்டதொழிலாளிகள், ஜனநாயகக்கொள்கை களையுடைய கீழ்த்தர முதலாளிகளை விடப் பொதுவுடமையாளர்களால் ஆதரிக்கப்பட்டனர்.

ஜனநாயக அரசுரிமையைப்பெற்றிருக்கும் அமரிக்காவில் பொதுவுடமையாளர் அந்தச்சட்டதிட்டங்களை ஏழைத்தொழிலாளரின் சாதகத்திற்காகவும், முதலாளிகளின் பாதகத்திற்காகவும் உபயோகப்படுத்திவரும் கட்சியினராகிய தேசிய நிலச்சீர்திருத்தக் காரர்களோடு (Agrarian national Roformers) ஒத்துழைக்கின்றனர்.

ஸ்விஜர்லாந்தில் தீவிரக்கட்சியினரே பொதுவுடமையாளரின் ஒத்துழைப்பைப் பெறத்தக்கவர்களாகயிருக்கின்றனர். அவர்களிலுங்கூட வியட் (Viud) ஜினிவா (Geniva) முதலிய மாகாணங்களைச் சேர்ந்த தீவிரவாதிகளே முக்கியமானவர்கள்.

ஜெர்மனியில் இப்பொழுதான் எதேச்சாதிகார ஆசாங்கத்திற்கும், முதலாளிகளுக்கும் போராட்டம் துவக்கியிருக்கிறது. முதலாளிகள் நங்களுடைய அதிகாரத்தை நிலைநிறுத்திய பின்பு தான் பொதுவுடமையாளர்கள் அவர்களோடு போராட முடியுமானதால் நங்களுடைய சொந்த நன்மைக்காகவே பொதுவுடமைக் காரர்கள் முதலாளிக உதவி ஸ்தானத்தையடைவதற்கு உதவி செய்து கூடிய சீக்கிரத்தில் அவர்களின் செல்வாக்கை வீழ்த்தவேண்டும். ஆகையால் பொதுவுடமையாளர் தாராள மனப்பான்மையுடைய முதலாளிகளுக்கு உதவி செய்து யதேச்சாதிகார அரசாங்கத்தை ஒழிக்க முயல வேண்டும். அதேசமயத்தில் அவர்கள் முதலாளிகளின் பொய்ப்பாவனாக்குறுகிகளாகிய வலையில் தாங்கள் சிக்காதபடி தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும். எனினில் முதலாளிகள் தங்களுடைய ஜெயமானது ஏழைத்தொழிலாளிக்கு மனச்சாந்தியை அளிக்குமென்று பகிரங்கப்படுத்துவார்கள். ஆனால் முதலாளிகளின் ஜெயத்திலால் இரண்டே நன்மைகளைப்பொதுவுடமையாளர்கள் அடைவார்கள்.

1. பொதுவுடமைக் கொள்கைகளைப் பரப்புவதற்காக ஏற்படுத்த ஹடையூறுகள் கொஞ்சம் குறைவுபட்டு அதனால் ஏழைத் தொழிலாளிகளிடையே ஒருகட்டுப்பாடும், தீவிர உணர்ச்சியும்ஏற்படும்.

2. எதேச்சாதிகார அரசாங்கமானது வீழ்ந்தவுடனேயேஏழைத்தொழிலாளர்களுக்கும், முதலாளிவகுப்பினருக்கும் உள்ள போராட்டமானது ஆரம்பமாகி விட்டதென்று வெகு தெளிவாகத் தெரியவரும். பின்னர் மற்ற தேசங்களிலுள்ள முதலாளிகளோடு அத்தேசத்துப் பொதுவுடமையாளர்கள் எவ்வித சம்பந்தத்தை வைத்துக் கொண்டிருக்கின்றனரோ அதே மாதிரி ஜெர்மன் பொதுவுடமையாளர்களும் ஜெர்மன் முதலாளிகளோடு வைத்துக்கொள்வார்கள்.

அடுத்த வாரம்.

அடுத்த வாரம் 'ருஷியப் புரட்சி'' என்ற வியாசம் வரும்.

வட ஆற்காடு ஜில்லா சுயமரியாதை மகாநாடு. திருப்பத்தூர்.

26-3-33ந்தேதி தோழர் பி.பெரியசாமி பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் திருப்பத்தூர் சுயமரியாதைச் சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் என். ஜோஜன் அவர்கள் "சுயமரியாதை'' இயக்கம் என்றால் பணக்காரர்கள் என் பயப்படுகிறார்கள் என்பது பற்றி ½மணிநேரம் பேசியபின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் இந்திய சட்டசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு இக் கூட்டம் மகிழ்சியடைகிறது.

(2) வட ஆற்காடு ஜில்லா முதலாவது சுயமரியாதை மகாநாட்டை மே மாதம் 7ந் தேதி நடத்த தீர்மானிக்கப் பட்டது. தலைவர் முடிவுரைக்குப் பின் இரவு 7 மணிக்கு கூட்டம் இனிது கலைந்ததென ஷை. சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

தெடாவூர்.

பகுத்தறிவாளர் சங்கம்.

21-3-33ந்தேதி தோழர் டாக்டர் மூர்த்தி அவர்கள் தலைமையில் ஒருகூட்டம் நடைபெற்றது. தோழர் துரைசாமி அவர்கள் "இந்தியாவின் முன்னேற்றம்'' என்பது பற்றிபேசியபின் இந்தியசட்டசபைக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கும்தோழர்ஆர். கே. ஷண்முகமவர்களைப் பாராட்டியும், சேலம் முனிசிபல் சபையார் ஆதிதிராவிடர்களைப்பொது ஓட்டலில் விடவேண்டும்என்று தீர்மானித்ததை ஆதரித்தும் தீர்மானிக்கப்பட்டது. பின் இரவு 9-30மணிக்கு கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

சென்னை.

சமதர்ம வாசகசாலை மூலக்கொத்தளம்.

26-3-33ஞாயிறு மாலை 6-15மணிக்கு ஷை வாசகசாலையின் ஆதரவில் தோழர் மஹிமைதால் அவர்கள் தலைமையில் ஓர்கூட்டம் கூடியது. அதுகாலை தோழர்களான ஆர். என். எ. தாஸ், ஜி. ராஜரத்தினம் முறையே ஜாதி வித்தியாசத்தைப் பற்றியும், மூடப்பழக்க வழக்கத்தைப்பற்றியும், ஈண்டதோர் சொற்பெருக்காற்றினர் பின்னர் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

சிவகங்கை தோழர் எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். அவர்கள் காலஞ்சென்றமைக்கு அனுதாபப்படுவதாகவும், தோழர் ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல். இந்தியசட்டசபைத் தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டதைப்பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேறியது. என ஷை. சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

கோவை சுயமரியாதை வாலிபர்சங்கம்.

ஷை சங்கத்தின் கூட்டம் 30-3-33ந்தேதி மாலை 7-30 மணிக்கு சங்கக் கட்டிடத்தில் கோவை முனிசிபல் கௌன்சிலரும், சங்க உபத்தலைவருமான தோழர் ஆர். நஞ்சையா அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர் முடிவுரைக்குப் பின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது. சிவகங்கை தோழர் எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். அவர்கள் மரணமடைந்ததற்கு அனுதாபப்படுவதாகவும் தோழர் ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல். அவர்கள் இந்திய சட்டசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக இந்தியசட்டசபை அங்கத்தினர்களைப் பாராட்டுவதாகவும், காரைக்குடியில் போலீசார் தோழர்கள் ஸ்ரீவானந்தம், ராம சுப்பையா, கணபதி ஆகியவர்களை அடித்ததற்காகக் கண்டிப்பதாகவும், 2-4-33-ல் நடைபெறும் சங்கக்கூட்டத்திற்கு தலைவரையும், காரியதரிசியையும் வரும்படி கேட்டுக்கொள்ளுகிறது எனத் தீர்மானித்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருப்பூர் மு. மு. கோர்ட்டில்.

1933 ஹு I. A. No. 6.
1932 ஹு I. A. No. 1375.
1929 ஹு O. S. No. 786.

1. மாரிமுத்து போயன், 2. மைனர் பொன்னுசாமி போயன் —வாதி)

(அடுத்த சினேகிதன் தமயன் 1-ம் வாதி.

அவனுஷி தாலூகா கணியாம்பூண்டி கிராமம் மஜரா முருகம்பாளையத்திலிருக்கும் அய்யாவு போயன்மகன் மருதாசலபோயன்—2-ம் பிரதிவாதி.

ஷை நெம்பரில் 23-11-32 தேதியில்தள்ளுபடிசெய்திருக்கும் I. A. 1375/32 மனுவை திரும்பவும் Reston செய்துகொண்டு Final Decree செய்யவேணுமாய் I. A. 6/33-ல் மனுக்கொடுத்து அது வாய்தா 5—4—33 தேதி போட்டிருக்கிறது. ஆகையால் ஷை மனு விஷயமாய் ஏதாவது ஆக்ஷேபணையிருந்தால் ஷை தேதியில் காலையில் 10-மணிக்குள் ஆஜராய் தெரிவித்துக்கொள்ளவேண்டியது. தவறில் ஒருகட்சியாய் தீர்மானம் ஆகிவிடும் என்கின்ற விவரம் அறியவும்.

G. ஏகாம்பரத்தினம் B. A. B. L.,
வக்கீல்.

திருப்பூர் 21-3-33.

இவைகளை ஒழிப்பதற்கு இம்மாதிரி கண்டிப்பாக பேசுவதன் மூலம் நாம் கெட்ட பெயர் வாங்கிக்கொள்ள வேண்டியது தான். தோழர் பொன்னம்பலனார் கூறுவது நடு நிலைமையிலிருந்து யோசிக்கும் எவருக்கும் அக்கிரமம் என்றே பொய் என்றே எற்படாது.

சாமியைப் பற்றிக் குறை கூறுவதும் அக்கிரமமல்ல. கடவுள்களின் பேரால் இந்நாட்டில் சகிக்க முடியாத கொடுமைகள் நடப்பது எவ்வளவோ சொல்லிப் பார்த்தாகி விட்டது. எத்தனையோ கோடி ரூபாய்கள் வீணுக்கப் படுவதை தடுக்க எங்கள் இயக்கம் எவ்வளவோ சொல்லியும் வந்தது. இனி என்ன செய்வது இனியும் பச்சை பச்சையாகவே பேசினாலும் மக்கள் மனதில் பட்டு அவர்கள் திருந்த வேண்டும் என்ற எண்ணமே தவிர வேறு யாரிடத்திலும் துவேஷமோ சண்டையோ எங்களுக்கு கிடையாது அவ்வித நோக்கத்துடனும் இது பேசப்படவே இல்லை.

கடவுளின் பேரால் மதத்தின் பேரால் மத ஆச்சாரிகள் புரோகிதர்கள் குருக்கள் பாதிரிகள் சங்கராச்சாரிகள் செய்யும் அநீதியும் அக்ரமமும் எவ்வளவு? சுயமரியாதைக்காரன் அவர்களின்குறைகளை கூறுவதிலுள்ள அக்கிரமம் எவ்வளவு என்பதை விசாரிக்க ஒரு கமிஷன் ஏற்படுத்தி தீர்ப்புக் கூறச்செய்தால் சுயமரியாதைக்காரன் அயோக்கியத்தனமாகப் பேசுகிறானு அல்லது சங்கராச்சாரியும் அவரது கூட்டமும் பேசுவதும் எழுதுவதும் எழுதிவைத்திருப்பவைகளும் அயோக்கியத்தனமானதா என்பது வெளியாகும்.

சு. ம. காரர்கள் வாயில் பேசுகிறார்கள் இது நாளை காற்றோடு காற்றுப் பறந்து போகும். ஆனால் சங்கராச்சாரி கூட்டம் எழுத்தில் நம்மை நாய் பன்றியிலும் கடையாய் எழுதி வைத்திருக்கிறார்கள் இதில் யார் அயோக்கியர்கள்.

மேலெழுந்த வாரியாக கவனிப்பதில் பிரயோசனமில்லை சுயமரியாதைக்காரன் சொல்வது என்ன என்பதை சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் எந்த அறிவுள்ள மனிதனும் சு. ம. காரன் மேல் குற்றம் சொல்ல முன்வர மாட்டான்.

இன்று நடக்கும் அக்கிரமங்களையெல்லாம் மக்களுக்கு விளக்கிகாட்டி அதனால் வரும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் அனுபவிக்கவே சுயமரியாதைக்காரன் தயாராயிருந்து வந்திருக்கிறான். இதுவே காரண மல்லாது சங்கராச்சாரியையோ அரசியல் சங்கராச்சாரி காந்தியையோ அனாவசியமாக குற்றம் சொல்லிக் கொண்டு திரியும்வேலை சு. ம. காரனுக்கு இல்லை.

தொழிலாளியின் நிலைமை.

தோழர்களே!

இந்நாட்டில் அல்லது உலகத்தில் தொழிலாளர்கள் என்னும் கூட்டம்

அனுப்புபாலையத்தில் தோழர் ஈ. வெ. இராமசாமியின் சொற்பொழிவு.

"தொழிலாளர் நிலைமை"

(சென்ற வாரத்தொடர்ச்சி)

எப்படிஎற்பட்டது, அதுஎன் ஏற்பட்டிருக்கவேண்டும், தொழிலாளர் கடமைஎன்ன, அவர்கள் நலனுறும் வழி எப்படி, அவர்களதுதொழில்உழைப்பு சரியாக இருந்தும் அவர்களது வீழ்ச்சி வறுமைக்குக்காரணம்என்ன, இன்றும் இவர்கள் யாரால் எதனால் இந்த நிலைமையி லிருக்கிறார்கள் என்ற விஷயங்களை முதலில் கவனிக்க வேண்டும்.

தொழிலாளர்கள் என்பவர்கள் யார் என்றால் சரீர உழைப்பாளிகளே தான். பலர் பலவிதமான தொழில்களைச் செய்யலாம் ஒருவர் வெட்டலாம் ஒருவர் சுமை, சுமக்கலாம் மற்றவர் முடையலாம் இன்னொருவர் சிறைக்கலாம் வெளுக்கலாம் மற்றொரு கூட்டம் புது புது விதமாக மக்களுக்கு வேண்டிய சாமான்களையும் செய்யலாம் - இவர்கள் முதலியவர்கள் எல்லாம் தொழிலாளிகளே ஆவார்கள். இவர்கள் என் பிரிக்கப்பட்டு ஒருவருக்கொருவர் சம்பந்த மில்லாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை யோசித்தால் உண்மையும் அதிலுள்ள பலத்த சூழ்ச்சியும் விளங்காமல் போகாது.

மனிதன் ஆதியில் நாகரீகமில்லாமல் காட்டுமிராண்டித்தனமாகவும், கூட்டுறவு முறை என்பது சிறிதும் இல்லாது தனித்தனியே வாழ்ந்து வந்த காலம் நாகரீகம் என்பது தெரியாமலும் ஏதோ கிடைக்கும் வல்லதுவைத்தின்று தண்ணீர் குடித்து விட்டு வெட்டவெளிகளிலோ கல் பாறைகளிலோ படுத்து உறங்கிய காலம் நீங்கி மனிதன் மனிதனுடன் கூடி சமூகமாய் வாழ ஆரம்பித்த காலத்திலேதான் தொழிலாளி ஏற்பட்டிருக்கவேண்டும். எனெனில் மனிதன் காட்டுமிராண்டித்தனத்திலிருந்து விடுபட்டவுடன் பெண்டு பிள்ளை என்ற பாசம் ஏற்பட்டு கூடி வாழ நினைத்ததால் தனக்கென ஒரு குடிசை ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியமாயிற்று. குடிசை கட்டவேண்டுமானால் அதற்குரிய சாமான்கள் கம்பு கழிகள் முதலியன திருத்தி அமைக்க தொழில்கள் செய்துதான் தீரவேண்டும். அதில் ஒருவருக்கொருவர் கூடி உதவி செய்துதான் ஆகவேண்டும். குடிசை வாழ்க்கையிலிருந்துஇன்னும் கொஞ்சம் வாழ்வுஉயர உயர அறிவுசிந்தனை சக்தியும் வளரவளர வாழ்க்கையில் சுகமாக இருக்கவேண்டி பல சௌகரியங்களை செய்து கொண்டான். அச்சௌகரியங்களை யடைவதற்கு தன்னாலும், பிறராலும் தேவையான வேலைகள் அவசியமாக இருந்தது எனவே அவ்வப்போது தோன்றிய யுக்திக்குத் தகுந்த பிரகாரம் மனிதனுக்கு தேவைக்கு தகுந்த உபகரணங்களிலிருந்து இன்று நிலைமைவரையிலும் தொழில்கள் ஏற்பட்டன. முன் சொன்னபடி குகையிலிருந்து வந்ததற்கு பதிலாக குடிசைவேண்டும்போது அதற்கவனும் சேர்ந்து கட்டிக்கொண்டான் என்ற முறையிலேயேதான் வர வர அறிவுக்குத்தகுந்தபடி தொழில் விருத்தியும் கூட்டுறவும் பெருகிவந்தது. அந்த நிலையில்தான் தனி மனிதன் குடும்பமானான். இதனால் நாளாவட்டத்தில் அறிவு விருத்தியால் சிலருக்கு சோம்பேறித்தனம் ஏற்பட்டு அடுத்தவன் உழைப்பில் 3-வது மனிதன் உழைப்பில் சுகம் அனுபவிக்க எண்ணம் தோன்றிற்று. சோம்பேறித்தனமாக உண்டு உறங்குவதற்கே யோசனை கண்டுபிடிக்கவே இப்போதுள்ள தன்பங்கள் ஆதிகாலத்தில் ஏற்பட்டன. அதை எப்படி வைத்துக் கொண்டாலும் சரி, ஒருவன் உழைக்க அதில் மற்றவன் வாழ விரும்பும் காலம் ஏற்பட்ட அன்றே இத்தனை சூழ்ச்சிகளும், தீங்கும் ஏற்பட்டன. நிற்க,

இப்போது தொழிலுக்கு என்றே அவனுக்கு கூலியும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. நிலம் ஒருமனிதன் தனக்குச்சொந்தம்என்று சொல்லிக்கொண்டு ஒய்யாரமாக நாமம், விபூதியையணிந்துகொண்டு காலையிலும், மாலையிலும், வந்து எண்டாதையைச்செய்யவில்லை, இதைச்செய்யவில்லை என்று அதிகாரம் செய்துவிட்டுப்போவான். ஆனால் நிலத்தில் வேலை செய்யும் தொழிலாளியோ, நிலம் கல்லும் முள்ளுமிருந்தாலும் அதை வெட்டி உழுது நீர்இறைத்து விதைத்து அறுத்துவிளையும் தான்யத்தை மலைபோலக்குவித்து வைத்துஓடோடியும்முதலாளிஎன்பவனை அழைத்துக்கொண்டுவந்து அளந்து கொட்டிவிட்டுதான் இரத்த வேர்வை சொட்டசொட்ட பாடுபட்டதற்கெல்லாம் 1, 2 கலம் மட்டும்பெற்றுக் கொண்டு திருப்தியடையவேண்டும். இது கிருஷித்தொழில் செய்யும் தொழிலாளிகளுக்குமட்டுமல்ல. மற்ற ஒவ்வொரு தொழிலிலும் இதுபோலவே சோம்பேறியே ஊதியமடைகிறான். இம்முறை மாற்றப்படாமலிருப்பதற்கு தொழிலாளிகள் பணம் காசுமீத்து மிச்சப்படுத்தி முன்னேறிவிடாமலிருப்பதற்கும் ஜாக்கிரதையான பாதுகாப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. ரூபாய்க்கு பத்துபடி சோளம்விற்ற்ல் தொழிலாளிக்கு சம்பளம் மாச 1க்கு 28படி சோளமிருக்கும் 5படி சோளமாக விற்ற்ல் மாதச்சம்பளம் 2அல்லது 3 ரூபாயாகத்தான் இருக்கும். எனவே இம்மாதிரி தொழிலாளிகள் முன்னேறாமலும் முதலாளிகள் அல்லது சோம்பேறி கூட்டத்தினர்கள் ஆதிக்கம் எப்போதும் வலுவடையவே அதற்கு சாமி மதம் சாத்திரம் புராணம் ராஜ்யம் அரசு முதலியவைகள் முதலாளிகளால் ஏற்படுத்தியிருக்கிறது. இக்கொடுமைகள் நீங்கி இனி உலகமே சாந்தியையடைந்து உலக ஒற்றுமை சகோதரத்துவம் எல்லாம் உண்டாகவே முதலாளி தொழிலாளி சமத்துவம் என்னும் கிளர்ச்சி ஏற்பட்டது. உலகப்போராட்டத்திற்கும் அதிருப்திக்கும் கஷ்டத்திற்கும் காரணம் பாடுபடுகிறவன் சோம்பேறி அல்லதுதொழிலாளி அவன் உழைப்பைத்தின்கிறவன் என்றும் இரண்டுவித தத்துவம் இருப்பதுதான்.

இது மாற்றப்பட்டு உலகில் தொழிலாளியன்றி சோம்பேறிக்கு இடமில்லை என்று சொல்லக்கூடிய நாளில்தான் "மனித சமூகம் தனது நிலையை அடைந்தது" என்று சொல்லமுடியும். அல்லது மிருகத்திலும் கேவலம் என்றுதான் சொல்லவேண்டும். மனிதனைத்தவிர உலகில்வேறு எந்த ஜந்துவேனும் அடுத்ததை ஏமாற்றி அடுத்த ஜந்துவின் உழைப்பில்தான் வாழவேண்டும் என்று இவ்வளவு சூழ்ச்சி செய்வதில்லை. ஆனால் மனித சமூகத்தில் மாத்திரம்தான் இந்த எண்ணம் இருந்துவருகிறது. இது மாறுவதுதான் உண்மையான (மனிதசமூகத்தின்) முன்னேற்றமாகும். எந்த மனிதனுவது சோம்பேறிகளுக்கு பாடுபடவென்று பிறப்பதற்கு முடியவே முடியாது. வழக்கமில்லாத இயற்கைக்கு மாறான முறைஇன்று மக்களிடமிருந்து வருகிறது.

அதுவும் உயர்ந்த லட்சியத்தின் பேரால் மதம், கடவுள், அவதார புருடர்கள் என்பவர்களின் வாக்கு சட்டம் ஆகியவைகளினால் அரசாட்சி முறையினால் பெரும்பான்மையான மக்கள் ஒரு சிறுகும்பலுக்கு உழைத்துப் பாடவேண்டியதிருக்கிறது. இதைமாற்றி விடாமல் ஜாக்கிரதையாக பலவிதபந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது. அந்த பந்தோபஸ்து தான் தொழிலாளர்களிடையில் கடவுள் உணர்ச்சியைப் புகுத்தியதாகும். கடவுள் உணர்ச்சி மத நம்பிக்கைகளால் தான் கஷ்டப்

படும் எந்த மனிதனும் நாம் பாடுபட வே பிறந்தோம் என்றுகருதுகிறான். அதுதலைவிதி ஜன்மப்பலன் என்று எண்ணுகிற இழிதகமைக்கு ஆதார மாகிறது.

சாதாரணமாக நீங்கள் ஒரு கஷ்ட ப்பட்டு நிலத்தை வெட்டி உழுது பண்படுத்தி, விதைத்து அறுத்து முதலாளிக்குக் கொடுக்கும் ஒருதொ ழிலாளியை என் நீ இத்தனைபாடு பட்டுத்தேடியதானியத்தைக்குவித்து கொடுத்து விட்டு நீ மட்டும் என் சரியாக உணவுக்கும் இல்லாமல் பட் டினியாக ஓட்டைச் குடிசையில் முடக்கிக் கிடக்கிறாயா என்றும் என் உனது உழைப்பின் பலனை நீ அனு பவிக்கமுடியவில்லையென்றும் நீதானே எல்லாம் பாடுபட்டவன் என்றும் கேட்டீர்களானால் அவன் "நான் என் னசெய்வேன். நான் தான் பாடு பட் டேன், உழைத்தேன், அறுத்தேன், குவித்தேன். ஆனாலும் நமக்கு அது பவிக்ககொடுத்துவைக்கவேண்டாமா? நமது தலைவிதிப்படி தானே எதுவும் நடக்கும்" என்று சற்றும் தயங்கா மல் கூறுவான். அதுமட்டுமா. நமது நிரகம் என்றும் கிடைத்ததை உண்டு இருக்கவே கடவுள் கட்டளை என்றும் சொல்லுவான். ஆனால் முதலாளி என்பவனைப்பற்றி அவன் என் பாடுபடாமல் அனுபவிக் கிறான் என்றால் போன ஜன்மத்தில் புண்ணியம் செய்தவன், லட்சுமி புத் திரன், கொடுத்துவைத்தவன்என்பது போன்ற வார்த்தைகளைச் சொல் வானேயன்றி மனம்நோகமாட்டான் எந்த தொழிலாளியாயும் நாம் தான் உழைத்தோம், நாம் தான் உழைத் தோம், நாம் அனுபவிப்பது 'தான் ஒழுங்கு, முதலாளி என்பது வெறும் சூழ்ச்சி தன்மை, அவனது செயல் கள் அக்கிரமமானது என்று எவ னும் சொல்லவுமாட்டான்.

ஒரு கொத்தன் நாலு அடுக்கு ஐந்து அடுக்கு மாடி கட்டிக் கொடு த்து விட்டு அவன் மட்டும் மேல் கூரையும், சுவருமில்லாத ஈரமுள்ள "குடிசை" யில் பாயும் தலையணை யுமின்றி படுத்து தூங்குவான். அவனை யும் அந்தப்படி கேளுங்கள் அவனும் அவ்விதமே தலை விதி என்று தான்பதில் சொல்வான். காசுமாலைகளையும், வைர கைகளை யும் சங்கிலியும் செய்து கொடுக்கும் தொழிலாளியின் மனைவி மக்களுக்கு சமூத்திலோ நூல் சறடு தான் இருக் கும். பட்டாடைகள் உயர்ந்த கம்ப ளங்கள் நெய்து கொடுக்கும் நெச வுத் தொழிலாளியும் தனது இடுப் பில் உடம்பை மறைக்கப் போதிய துணி இருக்காது அவனது குழந் தைகளோ 10, 12 வயது வரையில் கோவணம் கட்டியே தான் அலையும் அவனும் தான் என்ன செய்வேன் எனது தலைவிதி முன் ஜென்மபலன் என்று தான் சொல்லுவான் பாத்தி ரத் தொழிலாளர்களாகிய நீங்களும் அனலிலிருந்து காய்ந்து கொட்டி பிழிந்து அழகான பாத்திரங்களைச் செய்து கொடுத்து விட்டு கூலிக்கு மண்டை யுடைத்துக் கொண்டு சோம்பேரிக் கூட்டத்தினர் மட்டும் தான் உல்லாசமாக வாழவும், நீங்கள் காலருக்கு நான் தரித்திரப்படவும்என் என்று கேட்டால் நாம் என்ன செய் வோம் எல்லாம் கடவுள் பகவான் ஆண்டவன் என்று தான் சொல்வீர் கள். எந்தக்காரியத்திலும்பகவான்தலை விதி சாமி மதம் என்பதைதம் மூளை புகுத்தியதால்தான் தொழிலாளிக்கு முதலாளி உயர்ந்தவன் உழைப்பாளி ஒடுங்கியே இருந்துதீரவேண்டும் என்ற நிபந்தனை ஏற்பட்டது.

ஜாதியில் தொழிலாளி என்பதாக வே ஒரு (ஜாதி) திட்டம் ஏற்பாடு செய்து அடக்கியாள நினைத்த அன் றே தொழிலாளிக்கு அறி விருந்து என் நான் அடங்கி வாழவேண்டும் என்று கேட்டிருந் தால் இன்று முதலாளி தொழிலாளி என்னும் கூட்டமோ வித்தியாசமோ இருக்காது. ஆனால் கடவுள்உணர்ச்சி யானது உங்களை அடங்கச்செய்து விட்டது. என்றைக்கும் வித்தியா சமிருக்கவே கடவுள் என்னும் ஒன் றைப்புகுத்தி அதுவும் புரண்டுவிட் டால் என்ன செய்வது என்று மதத்தையும் ஜாதியையும் ஏற்படுத்தி தொழிலை பெயர்கொடுத்து அதை ஜாதியாக்கி ஜாதியில் உயர்வுதாழ்வு கற்பித்து அதைக்காப்பாற்றவே அரசாங்கம் போலீஸ் என்பதும் வைத்து முதலாளி தொழிலாளி முறை நிரந்தரமாகவே இருக்கச் செய்கிறது.

இந்த தொழிலாளி ஜாதி என்பதே மறைந்துவிடவேண்டுமானால் முத லாளித்தன்மை என்பது உலகில் எங்கும் இருக்கவேகூடாது என்று கூறவும் அதற்காக வேலை செய்யவும் தைரியமாகநீங்கள்முன்வரவேண்டும். முதலில்அரசாங்க சட்டங்கள் மாற்ற ப்படவேலை செய்யவேண்டும். அதை விட்டு விட்டு இன்னும் கடவுள் கட வுளென்று கத்திக்கொண்டிருந்தால் ஒருநாளும் அடிமைபுத்தி விலகப் போவதில்லை.

திடீரென உங்கள் வருமையை நினைத்து இயற்கையாக உங்கள் இர த்தத்திலிருக்கும் உணர்ச்சியால் இர ண்டொரு நடவை நீங்கள் முயற்சி க்கலாமே தவிர அதனால் நீங்கள் வெற்றியடைய முடியாது. நிச்சய மாக வெற்றிபெற வேண்டுமானால் கடவுள் தன்மை மதத்தின் பேரா லுள்ள குருட்டு நம்பிக்கை, குறுகிய நோக்கம் ஒழித்து முன்வரவேண்டும். கடவுளும் மதமும் ஒழிந்த அந்நா ளே தொழிலாளியின் விடுதலைநாளா கும்.

கடவுள் உணர்ச்சியை நீங்கள்எவ்வ ளவு விடாபிடியாகக்கொண்டாலும் காலமாறுபாட்டால் உங்கள் சந்ததி கள் அதை பின்பற்றுவது குறைந்து போகும். தொழிலாளிகளின் இத் தினைதான்பத்தைக்கண்டும், பார்த் தும், அனுபவித்தும் வந்த ஒரு தொ ழிலாளி இத்தனை ஆயத்தத்துக்கும் தப்பி திருட்டுத்தனம் உண்மை மறு ப்பு முதலிய பித்தலாட்டங்கள் எல் லாம்செய்து ஒருசமயம்நானே அவனும் ஒருமுதலாளியாக ஆகிவிட்டால்தான் தொழிலாளியாக இருந்த காலத்தி நிலுள்ள சம்பவங்களை மறந்துவிட்டு முதலாளி வர்க்கத்தில் ஐக்கியமாகி தொழிலாளிகளை கசக்குவான் என் பதில் சந்தேகமில்லை. அவனும் முதலாளியிடம் அடிமையாகவே இருந்து தந்திரமாக பிழைத்து முத லாளியை ஏமாற்றித்தான் வந்தவ னதலால் தன்கீழுள்ள தொழிலாளி யையும், சந்தேகித்து கவனிப்பான். ஆனால் இன்று உலகமெங்கும் கிளர் ச்சி செய்யப்படும் நமது முயற்சி யானது முதலாளி தொழிலாளியாக வோ, தொழிலாளிமுதலாளியாகவோ மாறிவிட முடியாது.

நமது முயற்சி உலகத்திலேயே முதலாளி தொழிலாளி வேற்றுமை ஒழித்து முதலாளியென்றோ, தொழி லாளியென்றோ ஒரு தனி வகுப்பு இல்லாமல் யாவரும் சமமாக வாழ வேண்டும் என்பதேயாகும். இன் னும் நமது பிரயத்தனம் எது என் றால் இனி எக்காலத்திலும் அவ்வே ற்றுமைகள் உண்டாகிவிடாமலும் மனித சமூகத்தில் உயர்வு தாழ்வு என்ற எவ்வித பிரிவுகளும் இல்லாம லும் இருக்கவேண்டும் என்பதாகும்.

ஒரு ஊரில் அல்லது ஒரு மாகாண த்தில்மட்டும்தொழிலாளிஇல்லை, முத லாளி இல்லை என்றுவிட்டால்மாத் திரம் போதாது. உலகிலேயே எங்க ளுள் முதலாளி தொழிலாளி எனை ஒருவனை ஒருவன் சுரண்டாத பணக்காரன் என்பதுள்பட எப்படிப் பட்ட முதலாளி ஆதிக்கம் என்பதும் இருக்கவேகூடாது.

இம்முறைகள் இலேசான மாற்ற லின்மூலமாகிவிடாதுசுலபத்தில்நிலை பெற்றும்விடாது. ஆதலால் கடு மையான சட்டங்கள் மூலமும், பிர சாரங்கள் மூலமும் மக்களின் மன மாற்றமடைந்தபிறகுதான்இன்பமாக வாழமுடியும்.

தொழிலாளி அடிமையாக நிரந்தர மாக வாழவேண்டுவதற்கு நிரமமா கவே இப்போதுள்ள ஜாதி சமூக முறை சட்டம் ஒழுக்கம் மத தர்மம் அரசாங்கம் என்பவை எல்லாம் இருக்கிறது. உலகில் இம்மாதிரி யான வேற்றுமை தனிப்பட்ட கூட் டத்தின் ஆதிக்கம் என்பவை இல்லை என்றால் அரசாங்கம் ஜெயில் போ லீஸ் இராணுவம் வேண்டியதில்லை இன்று ஒரு நாடுதவிர உலகிலுள்ள அரசாங்கம் ராணுவமெல்லாம் பணக் காரனுடைய பாதுகாப்புக்கும் தொ ழிலாளிகளை அடக்கவுமே ஏற் பட்டது.

இராஜா என்றால் இக்கூட்டத்தில் பொலுக்கி எடுக்கப்பட்ட சோம்பேரி களின் பிரதிநிதி என்னுதான் அர்த் தம்.

இவைகள் எல்லாம் ஒழிவதுஎன்ன வந்துவிட்டால் உலகில் துவேஷம் ஆச்சரியம் அதிருப்தியே இருக்காது இதற்கு வெறும் சங்கமும் பிள்ளை தாய்மார் வணக்கமும் செய்து கூட்டம் போடுவதால் எதையும் அசைத்து விட முடியாது.

நமது முயற்சிகளை முதலாளி கள் கெட்டியான ஆஸ்திபாரத்து டன் எதிர்ப்பார்கள் இவைகளை தாக்கவும்தயாராக இருக்கவேண்டும். தொழிலாளர் நன்மைக்கு என்று வாயளவில் பேசுவதினால் எதுவும் வந்துவிடாது.

சாதாரண கிளர்ச்சி கூட்டத்தின் மூலம் கொஞ்சம்கூலி அதிகமாக வேண்டுமானால் கிடைக்கலாம்— இவைகளால் முன்னேற்றம் எது வும் இல்லை. முதலாளிகளுடன் வாதாடி 2 அணா அதிகமாக சம்பா தித்தால் மாத்திரம் போதாது. நீங் களும் நகுந்தபடி சுகப்படாமல் தற் கால வாழ்க்கை முறையில் முத லாளியைக் காப்பியடித்து அவனைப் போலவே நீங்களும் செலவு செய்து விடுவதும் 4 அணா மீதமிருப்பதை ஆடம்பரமாக செலவுச்செய்துவிட்டு மறுபடியும் முதலாளியிடமேபோய் கெஞ்சுவதும், வாய்கட்டி வயிற்றைக் கட்டி 10-ரூ. சம்பாதித்தால் உங்கள் மனைவி மக்கள் தேருக்கும், திருவிழா விற்கும், பண்டிகைக்கும் செலவு செய்வதும் தொழிலாள முன்னேற்றமாகாது. எனெனில் கடவுளும் சாமியும், பூதமும், தொழிலாளர் களுக்கென்றே ஏற்படுத்தி வைத்தி ருக்கிறது. எவ்விதத்திலாவது 10, 5 மீதப்படுத்தி வைத்து தொழி லாளி முன்னேறினால் முதலாளி தத்துவத்தை எதிர்க்க நேரிடும் அல்லவா? ஆதலால் வருடம் 4 உற்ச வம், 12 பண்டிகை எடுத்ததெற்கெல் லாம் சடங்கு சாத்திரம் என்று ஏற் படுத்தி வைத்து சாம்பிலுக்காக முத லாளிகளையும் கொஞ்சம் செலவு செ ய்யச்செய்து தொழிலாளிகளை முழுப் பாப்பாராக்க ஓர் நல்ல வழி— இன்று மாரியம்மனுக்காக முதலாளி 5-ரூ. ஆடுவெட்டினால் தொழிலாளி என்பவன் 10-ரூ. ஆடுவெட்டினால்தான் பெருமையுண்டெனக்கருதி அதன் படியும் செய்கிறான். இவைகளை யெல்லாம் சமூகக் கட்டுப்பாடுகள் வழக்கங்கள் என்பதின்மூலம் மக்கள் பணம் கொட்டப்படுவதை கவனிக்க முடியாமல் ஏற்படுத்தப்பட்டிருக்கி றது.

தொழிலாளிகள் அதிகமாக இரு ந்தால் அவர்களுக்குச் சமீபமாகவே 4 கள்ளுக்கடை, 2 சாராயக்கடைக ளும் வைத்து விடுவார்கள். எல்லா விஷயத்திலும் முதலாளியுடன் போ ட்டி போட்டு சிலவு செய்தால் பழய கருப்பன் கருப்பன்தான் என்பதைத் தொழிலாளர்கள் சமூகம் கண்டிப் பாக உணரவேண்டும்.

இம்முறையில் தொழிலாளித்த வம் இருப்பது சமூக மூலம் வற்புர ப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக் கவனித்துப்பார்த்தால் விளங்கும். இவை ஒழியவேண்டுமானால் அஸ்தி வாரம் அதாவது சமூகம். ஜாதி, மதம், கடவுள் என்பனவைகள் தான்

முதலில் வெட்டி எரியப்படவேண்டும். நமது முதல் வேலை இவ்வேற்றுமைகளுக்கு அஸ்திவாரம் எங்கே என்று கண்டு பிடிப்பதுதான். கடவுள், சாமி, மதம் என்பவைகளைக் குறை கூறுவதாகவோ நீங்கள் வருத்தப்படக்கூடாது. கடவுள் என்றும் உணர்ச்சி தொழிலானர்களிடமிருந்து நீங்காதவரை ஒருக்காலும் முன்னேற்றமில்லை என்பதை மீண்டும் மீண்டும் வலி உருத்தவே இப்படிச்சொல்லுகிறேன்.

சாமியைத்தான் இழிவாகப் பேசுகிறேன் என்று கருதுவீர்கள். சாமி எங்கிருந்து வந்தது என்பது முன்னமேயே கூறினேன். முதலாளிகள் சூழ்ச்சியே சாமி ஏற்படுத்தியது. அச்சாமிகளினால் திருப்தியடைந்து வயிறு வளர்க்கும் ஒரு சோம்பேறிகள் தவிர வேறு எவனும் கடவுள்களின் யோக்கியதைகளைப்பற்றிக்கவலைப்படவேண்டியதில்லை. யோசித்துப்பார்த்தால் அதன் புரட்டுவெட்ட வெளிச்சமாகும். இத்தனை ஆண்டுகளாக இருந்த கடவுள்களால் உங்களிடமுள்ள எந்தக் குறையைக்கடவுள் கள்நிவர்த்தித்துவிட்டது என்று பார்க்கவேண்டும். இன்றைக்குத் தொழிலாளியை இந்நிலைமையில் வைத்திருக்கதவன் உழைப்பைக்கொள்ளைகொண்டு வாழும் முதலாளி சுகப்படக் அக்கடவுள் என் பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள். வேண்டுமானால் தினசரி வாழ்க்கையிலும்கூட அக்கடவுள் உணர்ச்சி தொழிலாளியைக் கெடுத்து வருவதைத் தவிர வேறு வழி காணேம். முதலாளியும் சாமிக்கு பூஜை கடபுடல் செய்தால் தொழிலாளியும் அவ்விதமே. தொழிலாளியும் பண்டிகை கொண்டாடுகிறான். ஏழை என்பவன் தனது சக்திக்குத் தகுந்தார்ப் போல் செலவு செய்யாமல் தனது சக்திக்கு மீறிப் பணக்காரனைப்பார்த்து செலவு செய்து கஷ்டப்படுகிறான். பணக்காரன்செலவு செய்வதில் பரவாயில்லை. 1000 பேர் தலையில் கையை வைத்து எந்த ஏழை வயிற்றிலாவது மண்ணடித்து அவன் ஆட்டம் போடுவான். நீயும் கையில் காசு இல்லாமல் கடன் வாங்கி அதைப்போலவே செலவு செய்தால் கஷ்டப்படுவதுமல்லாமல் பின்னும் அவனுக்கே அடிமையாக வாய் பொத்தி நின்று முதலாளி ஆதிக்கத்தையும் ஏதேச்சாதிகாரத்தையும் உண்டாக்க உதவி செய்தவனாகிறாய் ஒரேவிதமாகவே நீங்கள் இருக்கவேண்டும். என்றைக்கும் மீறக்கூடாது சூழ்ச்சியே என்றைக்கும் அடிமையாக இருக்க வேண்டும் என்னும் சூழ்ச்சியேதான் இம்முறையான சோம்பேறிகள், முதலாளிகள், புரோகிதர்கள், பாதிரிகள், குருக்கள் என்பவர்களால் எற்படுத்தப்பட்டிருக்கிறன. உண்மையில் நீங்கள் கடவுளாகம்பிக்கொண்டிருந்தும் அதுபாடுபடும் மக்களைப் பட்டினிபோட்டும் சோம்பேறி நின்று கொழுத்து சுகப்படவும் வைப்பது யோக்கியதையா? கள். கடவுள் பேரைச் சொல்லிச் செய்யும் பித்தலாட்டம் இன்னுமா விளங்கவில்லை.

உலகத்தில் எப்பாகத்திலேனும் இம்முறைகொஞ்சமேனும் இருந்தால் அங்கு வேற்றுமையும் கொடுமையும் இருந்தே தீரும். இக்கொடுமைகள் ஒழிக்கப்படவேண்டுமானால் பெரிய புரட்சி வேண்டும். ஆயிரக்கணக்கானவருஷமாகஇருக்கும்இச்செயலை ஒழிக்க மிக்க தைரியம் வேண்டும். எந்த தேசத்தில் அரசன் தனக்காரன் இருக்கிறானோ அந்தத்தத்துவம் இருக்கிறதோ அங்கெல்லாம் சாமி பூதங்களிருக்கவும், முதலாளிக்கூட்டம் வாழவும் தொழிலாளி பட்டினி கிடக்கவும் சோம்பேறி சுகப்படவுமே தான் இருக்கிறது.

மற்ற தேசத்துடன் நமது நாட்டையும் ஒத்துப்பாராததால் தொழிலாளியின் நிலைமை கொஞ்சம்அதிகமாகவே, கஷ்டமாகவே இருக்கிறதே தவிர குறைவில்லை என்று சொல்லலாம். நமது முறையீடுகளையும் துன்பங்களையும் கண்டு மிக்க அனுதாபியைப்போலவே இன்று பெரிய தேச பக்தன் என்று சொல்லுகிறவர்கள் நம்மிடம் வந்து சேர்ந்து நம்மை விட ஆயிரம் பங்கு அதிகமாக முதலாளிக் கொடுமைகளை ஒழிக்கவேண்டும் என்றே பேசுவான் இந்த உத்தமம் சகிக்கமுடியாது என்றே பேசுவான், ஆனால் நம்ம தயவால் கொஞ்சம் பதவி கிடைத்த உடனே முதலாளியிடம் சேர்ந்து கொண்டு உடனே தொழிலாளிகள் செய்வது அக்கிரமம் என்று கூப்பாடுபோடுவான். என் என்று கேட்டால் அக்கிரமம் செய்வது முதலாளியல்ல, சர்க்கார் தான் காரணம் என்று முதலாளியிடம் 5 ரூபாய் வாங்கிக்கொண்டு நம்மிடம் சமாதானம் சொல்லி சர்க்காரை சுட்டிக் காட்டி விட்டு இஸ்கே படுத்தி விட்டு விடுவான். நாமும் அவன் சொன்னபடி சர்க்காரிடம் முட்டிக்கொண்டு துப்பாக்கிக்கும், தடியடிக்கும், உயிரைவிடவும் போய்விடுவோம்.

(தொடரும்)

(5ம் பக்கத்தொடர்ச்சி)

வதில் ஏதாவது அர்த்தமுண்டா? மதம்போச்சு, மதம்போச்சு என்று கூப்பாடு போடும் மதப்பித்தர்கள், தோழர் பர்னட்ஷா அவர்கள்சொல்வதைக்கவனியுங்கள். ஜார்ஜ் பர்னட்ஷாவும் ஸ்ரீமதி ஆஸ்டரும் ருஷ்யாவில் சர்வாதி காரிஸ்டாலினிடம் பேசிக்கொண்டிக்கும் பொழுது ஸ்ரீமதி ஆஸ்டர் ஸ்டாலினைநோக்கி உங்கட்கு மதம் வேண்டாமா? மதமின்றி மக்கள் எப்படி உயிர் வாழமுடியுமென்று கேட்டார். அதற்கு ஜார்ஜ் பர்னட்ஷா என்ன சொன்னார் தெரியுமா? ருஷ்யர்கட்கு மீண்டும்மதம் வேண்டாம் ருஷ்யர்கள் மதத்தால் கிறைந்திருக்கிறார்கள். புதிய திட்டதில் மேற் சொன்னருஷ்ய புரட்சியே" ஆன்ம உணர்ச்சியோடு கூடிய ஒரு இயக்கம் (மதம்) என்றுசென்னார். எனவே மதபக்தர்கள் மதத்தின் பெயரால் செய்யும் கொடுமைகளைக் கலைந்து விட்டு "ருஷ்ய புரட்சி" யின் தத்துவத்தை பரிசிலனைச்செய்து பார்த்தால் போலி ஆன்ம உணர்ச்சியுடையவர்க்கு சரியான புத்திவற்படும் அதுசரியென்று ஒப்புக்கொள்ளுவார்கள். நிற்க, நம் நாட்டில் மதத்தின் பெயராலும், தெய்வத்தின் பெயராலும் கோடிக்கணக்கான பொருள்கள் மக்களுக்கு முற்போக்கான விஷயத்தில் சிலவழிக்கப்படாமல் விரையமாவதைப்பற்றி யாவர் மனதிலும் பதியுமாறு தீவிரகிளர்ச்சி செய்து சு. ம. கக்ஷி ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது. மக்கள் உண்மையை உணர்ந்து கொண்டாலும்கூட தர்மகர்த்தாக்களும், சங்கராச்சாரிகளும்மகந்துக்களும் மடாபதிகளும், விடாப்பிடியாக பிடித்துக்கொண்டுவழக்கத்தை விடாமலிருப்பதுவருத்தக்கதே. என்றாலும் சு. ம. கக்ஷியின் மூடப்பழக்க வழக்கத்தை ஒழிக்க அரசியல்ஸ்தாபனமே உபயோகப்படவேண்டுமாதலின் மேற்ப்படிஸ்தாபனங்களை சமதர்மகட்சியினர் கைப்பற்றவேண்டு மென்றீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் நிச்சயம் இது வெற்றி பெறுமென்பதில் சந்தேகம்இல்லை. கோடிக்கணக்கில் பொருள் மூடவழியில் செலவு செய்யப்படுவதை வறுமைவாய்ப்பட்டு தவிக்கும் மக்கட்கு சிலவழித்தால் எவ்வளவோ முன்னேற்றமாயிருக்கும். உடுக்கஉடையின்றி எழைகள் தவிக்கும் வேளையில் பாழானகல்லுக்கு பட்டாடையும் பீஸ்பீஸாக உடைகளும் நாசமாக்கப்படுவதையும், உண்ண உணவின்றி எழைகள் அல்லலுறும் வேளையில் பாழும் குழவிக்கல்லுக்கு கலம்கலமாக வடித்து பாவாடைப் போட்டு பார்ப்பனப் பெருச்சாளிகள் தின்னுக்கொழுப்பதையும், இருக்க வீடின்றி எழைகள் அவதிப்படும் நாளில் படிகல்லுக்கும் உபயோகமற்ற பாழும் கல்லுக்கு மாபெரும் கோவில்கள்இருப்பதையும், அனுதைக்குழந்தைகள் பாலுக்குச் சாவும் இந்நாளில் பாழுங்கல்லுக்கு குடம்குடமாக பால் மூடர்களால் ஊற்றப்படுவதையும், இன்னும் இது போன்றகொடுமைகளை சுயமரியாதையுள்ள எந்த அறிவுடைய மனிதனும் இந்தப்பாழும் பழக்கத்தைஇனியும் இவ்வாறு நடக்கவிட்டுக்கொண்டிருக்கமுடியுமா? இத்தகையசெய்கைகட்கு அடிப்படையாயுள்ளயாவற்றையும் தகர்த்தெறியக்கூடிய அரசியல் எதுவென்றால் அது சமமேற் சொன்ன தொழில் நாயக அரசியலேயாகும் எனவே அத்தகைய அரசியலைப் பெறுவதற்கு, விழிமின்! எழுமின்!! உழைமின்!!!

"புரட்சி ஓங்குக! பொது உடமை தோணுக!!"

திருப்பூர் மு. மு. கோர்ட்டு.

O. S. No. 823 of 1932.

குப்பாள்—வாதி.

1. சின்னராக்கி போயன், 2. கன்னி போயன், 3. ஆரா போயன், 4. ராம போயன்—பிரதிவாதிகள்.

மே மெம்பரில் 2 to 4 வரை பிரதிவாதிகளின் தகப்பனார் வாதிக்கு 23-12-21ல் எழுதிக் கொடுத்திருக்கும் அடமானப்பத்திரப்படி ரூ. 100-0-0க்கு தாவா செய்து அது 5-4-33ல் வாய்தா போடப்பட்டிருக்கிறது. மே தேதியில் 2ம் பிரதிவாதி சமுகம் கோர்ட்டில் ஆஜராகத்தவரினால் ஒருதலையாகக் கோர்ட்டாரால் தீர்ப்பு செய்யப்படுமென்ற விவரம் இதன் மூலம் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

(Sd.) A. ஸ்ரீதரமேனன்
B. A. B. L.
அட்வகேட், திருப்பூர்.

திருப்பூர் மு. மு. கோர்ட்டில்.

1933-ஹு S. C. நெ. 131

R. M. முத்துசாமி செட்டியார் —வாதி.

சிதம்பரம் தாலூகா கஸ்பா சிதம்பரத்தில் ஆனந்த ராயர் தெருவிலிருக்கும் ஆலால சுந்தரம் பிள்ளை மகன் சோமசுந்தரம் பிள்ளை—பிரதிவாதி.

மே பிரதிவாதிக்கு கோட்டீஸ்.

நீர் வாதியின் கடையில் ஜவுளி வாங்கி பற்று வரவு செய்துவந்த வகையில் பாக்கி ரூ. 131-15-0 கோர்ட்டு செலவு வகைபராவுடன் கிடைக்கவேணுமாய் தாவா செய்து தாவாவானது 7-4-33 தேதி விசாரணைக்குப் போடப்பட்டிருக்கிறது. மே தேதியில் நீர் ஆஜராகத்தவரினால் ஒரு கட்சியாக தீர்ப்பு எற்படும் என்கிற விவரம் அறிவிக்கலாகிறது.

(Sd.) T. R. சுந்தரம் பிள்ளை,
வாதி வகையில்.

திருப்பூர், 28-3-33.

கந்தப்பன் காதல் என்னும்
விதவைமணக் கண்ணிகள் 64.

திருச்சி தோழர் கே. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்களால் இயற்றப்பெற்று, திரிச்சிரபுரம் வித்துவான் அழகிய மணவாளர் அவர்களால் பரிசோதிக்கப்பெற்றது.

——:0:——

மாலைப் பொழுதினிலே மதுரை நகர் சாலையிலே
சோலை வனத்தினிலே தோன்றும் மயில்போலே (1)

கண்ணீர்க்குடமெடுத்து கனித்திதாரு பெண் மனங்கலங்கிக்
கண்ணீர்தனை யுகுத்துக் கவலையுடன் சென்றனளே (2)

நவமணியின் பணியிலுயர் கலமிகுந்த கற்பணியணியைப்
பவளஇதழ் குவளைவிழிப் பசுங்கிளியைப் பார்த்துரைத்து (3)

காட்டமுடன் தொடர்ந்த கல்லான் ஒரு இளைஞன்
சாட்டமுடன் தனியே மங்கை நீ செல்வதெங்கே? (4)

என்றுன் வினவுமே ஏற்றதொன்றுஞ் சொல்லாமல்
சென்றுன் பின்னுந் தொடர்ந்தான் செயலையறியவென்றே (5)

"நீசென்னைக் கேட்பதென்றுல் நீரா ரென்றே வினவி
ஊரென்ன? பேரென்ன? உள்ளதை உரையுமென்றுன் (6)

சுந்தரியே என்னுடைய சொந்த ஊர் தென்மதுரை
கந்தப்ப னென்றனக்குக் காளையிலே பெயராம் (7)

கந்தப்ப னென்று சொன்னல் கையினிலே வில்லம்பு
சந்தேகமில்லாமல் தானிருக்க வேணுமென்றுன் (8)

வீறு கொண்டு சொன்ன சொல்லே மெச்சினது போலேவாய்
ஊறுதடி மாதரசே! உண்மையுரைத்திடுவாய் (9)

என்னூருந் தென்மதுரை என்னிருப்புப் புதுநகரம்
என்பெயரோ முத்துமணி எகுவது கண்ணீர்க்கே (10)

நீரெடுத்துத் தனத்குடங்கள் நேரெடுத்துத் தலைமீது
ஆரெடுத்து வைப்பார்கள்? அத்துணைக்கு நானுனோன் (11)

தலைமீது நிறை குடத்தைத் தாங்கி வைக்க வருங்கருத்தை
மலைபோ துரைத்திடுவீர் கையறிந்து சொல்வேன்கான் (12)

சொல்வது தான் ஒன்றுமில்லை துணையென்று சொல்வதன்றி
நல்வார்த்தை பேசிவழி கூடி நடந்திடுவோம் (13)

நடக்கும் வழி கானறிவேன் நயக்கும்மொழி கானறிவேன்
மடந்தையரைத் தொடர்ந்துவரும் வழித்துணையும் பழிப்பாமே (14)

வழித்துணை யென்றெண்ணுமல் மான் போல் மிரளுகின்றுய்
பழிப்புரைக்கு வாராதபடி நடந்துகொள்வேனே (15)

எனிக்த வீண் பேச்சு இனியொன்றும் பேசாதீர்
நானிந்தச் சூதையெல்லாம் நன்கறிவேன் நில்லுமென்றுள் (16)

நில்லென்றுல் நிற்பேனோ? நெடுந்தூரம் வந்த என்னைச்
செல்லென்றுல் நின்னைவிட்டுச் செல்வேனோ? சொல்லும்பே! (17)

அருந்துணைபோல் வந்தவரே! அருகிருக்குஞ் சூனைதேரை
வருந்தாது கொண்டு செல்வேன் வழித்துணையை மதித்திடுவேன் (18)

என்றுன் அந்தப்படியே எடுத்தாள் தண்ணீரையுமே
சென்றுள் திரும்பவுமே சென்றுன் கந்தப்பனுமே (19)

பின்னடைந்து வந்தவளைப் பெண்ணே! என அழைத்துத்
தன்குடத்து நீரெனக்குத் தந்துதவவேணுமென்றுன் (20)

சூனைவரையில் துணைபோலுந் தொடர்ந்து வந்த சுந்தரரே!
எனைத்தண்ணீர் கேட்பதென்ன? ஏளனமோ பண்ணுகின்றீர்? (21)

போகவர நேரமில்லை பொற்கொடியே பொழுதாச்சு
தாக மிக வாட்டுதடி தண்ணீர் கொடுத்திடுவாய் (22)

தாங்கிக் குடமிரக்கித் தண்ணீருற்றான் கொடுத்தான்
வாங்கிக் குடிப்பவன் போல்வடிவழகன் கூறுகிறுன் (23)

தாகவிடாய் நீரைத் தண்ணீரை நீ கொடுத்தாய்
மோகவிடாயதனை முற்றவைத்து விட்டதடி! (24)

என்ற உரைகேட்டு இரு செவியில் காராகம்
சென்ற தெனைத்துடித்து நிலைக்து மனம் பதறி (25)

ஏது சொல்லி ஏது செய்தும் ஏளனமே செய்து வந்தால்
சூதுகொண்ட வாதாடும் தூற்றலுக்கும் ஆளாவேன் (26)

தூற்றலுக்கும் வைக்கவில்லை சூனைநீருற்கேட்கவில்லை
போற்றலுக்கு வைத்திருக்கும் பொற்குடத்து நீர் கேட்டேன் (27

என்ன உமது எண்ணம்? என்ன உமது செயல்?
என்ன கருதுகின்றீர்? என்ன என்னை வேண்டுகின்றீர்? (28)

போகவிடாய் நீரப் புன்சிரிப்பும் பின் எனது
மோகவிடாய்நீர முத்தி ஒன்றும் வேண்டுகின்றேன் (29)

முத்தியோ கான் கொடுப்பேன் முத்துமணியேயானல்
புத்தியே கான் கொடுத்துப் போவேன் புதுநகரம்! (30)

போதம் நிதி கல்வி பொன்று வருங்காலம் அயல்
மாதர்மேல் வைக்கும் அந்த மன மதையுங் கொன்றீரோ? (31)

வாழ்வைக் கெடுக்கு மென்றும் மதியை மதியாத
தாழ்வைக் கொடுக்குமென்றும் சாற்றினர் தக்கோரே (32)

என்றென்றும் ஒவ்வாத இவ்வழியிற் செல்லாதீர்
நன்றொன்று மில்லையென்றே கவின்முர்கள் நல்லோரே! (33)

கந்தப்பனென்றதுவும் கன்னிவள்ளி யென நினைத்தோ?
தந்தம் முலைக்குமுன்னென் தாலியறுத்துவிட்டார்! (34)

உருண்டு தழுவுன்ற ஓராண்டுப் பருவமதில்
சுருண்டு மடிந்தாலும் சுகமும் என் கணவன்! (35)

ஆராரோ மணமியற்றி அமங்கலையாய் எனை ஆக்கி
ஆராரோ! என்று சொல்லி ஆட்டினராம் தொட்டினிலே (36)

களமை தளரும் என்ற மதியிழந்த முதியோர்கள்
இளமை மணமியற்றி என் வாழ்வைக்கெடுத்தனரே! (37)

கொள்ளி முழுக்குமில்லை வேடிக்கைப் பொட்டுமில்லை
கள்ளிரூர் எங்களுக்குக் தாரணியில் இல்லையென்றே! (38)

மங்கை மறுமணத்தை வழக்காக கொள்ளவில்லை
எங்கள் குறைகளையே எவரும் கினைப்பதில்லை (39)

சாதி வழக்கமில்லை சாஸ்திரமும் பேசவில்லை
நீதியோ ஒன்றுமில்லை கோர்மையோ என்றுமில்லை! (40)

முன்னுளில் ராஜாராம் மோகன்ராய் சட்டமதால்
இக்காளில் உடன்கட்டை யேறுவதற்கியலவில்லை (41)

ஆரே துணைபோவார் அமங்கலையாய்ப் போனவர்க்கு
சீரே துமில்லைபன்றித் தெய்வமுமே இல்லைகண்டீர் (42)

ஒருவர்க் கொருநீதி உரைக்கும் மனுநீதி
தருவதுநீதி யென்றே கள்ளிரூர் ஆராய்ந்தோர் (43)

என்முலும் என்போன்முர் ஏற்ற வழியில் கின்று
சென்முலே கல்லதன்றிச் சீரழிதல் கல்லதன்றே! (44)

என்முள் கண்ணீர் சொரிந்து எங்கி மனந்தளர்ந்து
கின்முள் மதியிழந்து நின்முள் சில குலேச்தி (45)

பதியிழந்த பணியிழந்த பருவமதின் பாவியர்த்த
நிதியிழந்த கதியிழந்த கினைவுவந்து தினைமறத்தாள் (46)

மின்னனைய நுண்ணிடையாள் மேனி மிக வருந்தப்
பொன்னனைபான் தன்னடியில் பூங்கொடி போலே வீழுந்தான் (47)

வாரியெடுத்தனைத்தான் மடிமீதிருத்திவைத்தான்
காரிருளில் மாமுகத்தைக் கண்டான் மதியெனவே! (48)

மோகமெங்கே? தாகமெங்கே? முன் மொழிந்த போகமெங்கே?
சோகமங்கு தோன்றியதும் சொல்லாமற் போயினவே! (49)

கனைப்போ உனக்கின்று கவலையோ தான் கொடுத்தேன்
இனைப்போ உனக்குநான் எமாப்போ செய்துவைதேன் (50)

இல்வாழ்வின் இன்பமதை எல்லோரும் சமமாக
நல்வாழ்வு கொள்வதுவே நல்லதென்று நன்குணர்ந்தோர் (51)

கண்டார்கள் நல்லியக்கன கண்டார்கள் சீர்திருத்தங்
கொண்டார்கள் நன்நிலையைக் கொண்டார்கள் இந்நாளில்

என்றைக்கும் அஞ்சாதே! என்னுடலே நின்னுடலாம்
இன்றைக்கே நான் கொடுத்தேன் என்னுடைய வாக்குறுதி!

விடலே நான் கைவிடலே மீண்டுமிந்த உடலெயந்தச்
சுடலைகொண்டு போமளவும் துணையாகுந் துணையர்வேன்

அன்று திருவள்ளுவனுர் அருள் மொழியே பொய்த்தாலும்
இன்று நான் சொன்னமொழி என்றுமே பொய்யாதே! (55)

என்றுறுதி சொன்ன இவன் இனிய உரை கேட்டுவந்து
நன்று என்றுணர்ந்துகொண்டோர் நல்வாக்கு வேண்டுகிறுள் (56)

என்னவென்றுல் தன் வைத்துக்கேற்ற தொன்றும் வேண்டாமல்
"என் போன்ற பெண்கள் துயர் இனி ஒழியவேண்டு" மென்றுள்(57)

தேனே! கனிரசமே! தெவிட்டாத தெள்ளமுதே!
நானே நின் போன்றவர்க்கு நல்வாழ்வு தேடிவைப்பேன் (58)

விதவை மறுமணங்கள் மிகவியற்றிச் சமஉரிமைக்
கதவைத் திறந்து உங்கள் கண்ணீர் துடைத்திடுவேன் (59)

என்றே சபதமிட்டான் இறுக அணைத்துக்கொண்டான்
நன்றே நடந்ததிந்த நற்காதல் பூத்தமணம்! (60)

காதலனுங் காதலியுங் காதலுடன் வாழவைத்து
காதல் மணமே வளர்ந்து காசினி செழிக்கவென்றே (61)

சொல்லாற் பொருள் நிறைத்தான் தோகை மறுமணம்வளர்த்தான்
நல்லான் திருச்சி விஸ்வ நாதன் நவின்றனனுல் (62)

அன்னவன் அருந்தோழன் அழகிய நம்மணவாளன்
நன்னயமாய் ஆராய்ந்து நல்லுதவி செய்தனனே! (63)

கற்றினனைப் படித்தாரும் கனிந்துகேட் டுவந்தாரும்
மற்றினனைப் பற்றிமறு மணமியற்றி வாழ்வாரே! (64)

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பாடுபடும் மக்களாகிய நாங்கள் அதுவும் ஜனங்களிடம் பக்தி கொண்டு, உனது படைப்புகளான உலக மக்களுக்கு விவசாயம் செய்து தானியங்களை உண்டாக்கியும் தொழில்கள் செய்து சாமான்களை உண்டாக்கியும், வேலைகள் செய்து அவைகளை நாட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தும் கொடுத்த மக்களாகிய நாங்கள் இன்று மாத்திரமல்லாமல், வெகு காலமாய் வீடு இல்லாமல், போதிய தணிகளில்லாமல் ஆகாரமில்லாமல் அலைந்தைப்பட்டுபட்டினி கிடக்கின்றோம். மேற்கண்ட பாடுகள் படாத சோம்பேறிகள் ராஜாவாகவும், ஜமீன்தாரனுகவும், முதலாளியாகவும், குருவாகவும், மதப்பிரசாரகனுகவும், பெரிய பெரியஅதிகாரியாகவும் இருந்து கொண்டு அளவுக்கு மேல் அனுபவித்துக் கொண்டு மனம பதரும்படி செல்வங்களை வீணுக்கிக்கொண்டு வாழ்கின்றார்கள். இவைகளையெல்லாம் ஒரு வாரத்தில் சரிசெய்து எல்லோருக்கும் செல்வத்தையும், வேலையையும் சரி சமமாக்கி சமதர்மத்தை ஏற்பாடு செய்கின்றாயா? இல்லையா?"

என்று ஒரு நோட்டீஸ் கொடுத்து விட வேண்டும். ஒரு சமயம் ஆஸ்திகர்களான கடவுள் பிரசாரகர்கள் இதற்கு — இவ்வளவு பெரிய காரியத்திற்கு ஒரு வாரம் போறுமா வென்று கேழ்ப்பார்கள். கடவுள் சர்வசக்தியும் நினைத்தமாத்திரத்தில் எதையும் செய்யக்கூடிய வல்லமையும் உடையவர் என்று சொல்லப்படுவதால் ஒரு வார நோட்டீலே அதிக காலம் என்று சொல்லலாம். ஆகையால் அந்த வாய்தாவில் சமதர்மம் ஏற்படாவிட்டால் அதைஒழித்து அந்த உணர்ச்சியையே அப்படி ஒரு விஷயமோ, வஸ்துவோ, போருளோ ஒன்று இருந்ததாகவே ஞாபகத்திற்கு வரமுடியாமல் செய்து சமதர்மத்தை நிலைநாட்ட முயற்சி செய்யவேண்டும்.

அப்படிக்கில்லாமல் செக்கு மாடு சுற்றுவது போலும், அறைத்த மாவையே திரும்பத்திரும்ப அரைப்பது போலும், ஆண்டவன் செயல், ஆண்டவன் செயல் என்று சொல்லிக்கொண்டும் ஆண்டவனை தினம் 5-தடவை 10-தடவை பிரார்த்தித்துக்கொண்டும், பூஜை, உற்சவம், பிரார்த்தனை செய்யச்செய்து கொண்டுமிருப்பதில் பயனென்னவென்பதை யோசித்துப்பாருங்கள்.

சமதர்மம் என்றுநாம் சொல்வது எல்லாமக்களுடைய, எல்லாமத மக்களுடைய, எல்லா உலகமக்களுடைய சமத்துவத்தைப் பொருத்ததேயொழிய யாரோ, ஒரு சில சமூகத்திற்கோ, வகுப்புக்கோ, மதத்திற்கோ, தேசத்திற்கோ என்பதாக அல்லஎன்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள் மனிதனின் வாழ்க்கைக்கு சமதர்மம் என்பது ஒப்பற்ற சாந்தியையும், மனத்திருப்தியையும், நிம்மதியையும் அளிப்பதாகும். இன்று மனித சமூகமென்பதில் எந்த ஒரு தனிமனிதனுக்கும் அவன்எந்த நிலையில் இருப்பவனுனலும், எந்தப்பதவியிலிருப்பவனுனலும் சாந்தியோ, மனதிருப்தியோ, நிம்மதியோ, உண்மையான சந்தோஷமோ, பரஸ்பரஅன்போ, பொருமையற்ற தன்மையோ இருக்கின்றதா வென்பதை யோசித்துப்பாருங்கள்.

சென்னை மூலக்கொத்தளம் ஐக்கிய வாலிப கிளைச்சங்கம்.

ஷை சங்கத்தின் ஆதரவின் கீழ் 26-3-33ல் ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு பி. சுப்பராயன் ஸ்கூலில் எம். பி. முனுசாமி உபாத்தியாயர் தலைமையின் கீழ் ஷை கூட்டம் கூடியது. அச்சமயம் ஊரிலுள்ள பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள். முதலில் டி. என். ராகவேல்தாஸ் கல்வியினல் உண்டாகும் பலனைப் பற்றிப் பேசினர். பிறகு தோழர் எஸ். ஜி. கிருஷ்ணசாமி ஒற்றுமையைப்பற்றி பேசினர்.

பிறகு தோழர் சபா நாயகர் எம். பி.முனுசாமி உபாத்தியாயர் கல்வியைப்பற்றியும், ஒற்றுமையைபற்றியும் நம் ஜனங்களுக்கு விளங்குமாறு விளக்கி காட்டினர். பிறகு ஷை சங்கத்தின் பொக்ஷிஷாதிபர் எல். சாமிநாதன் சங்கத்தின் பொருட்டு ஷை ஊரிலுள்ள நீங்கள் இவ்வளவு திரளாய் எடுத்துக்கொண்டு இவ்வளவு நேரம் எங்களுடன் இருந்ததைப் பற்றியும் சபா நாயகருக்கு மாலை சூட்டியும் பிறகு வந்தனை உபசாரத்துடன் கூட்டம் இரவு 8-30 மணிக்கு இனிது முடிந்தது.

(ஒரு நிருபர்)

'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை
ஆசிரியர்- வி. நைனன்.
வருஷ சந்தா—2—8—0
விலாசம்:—சமத்வபோதினி
டிக்கோயா சிலோன்

The Rational Books Publishing Society Ltd.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்.

தலைமை ஆபீஸ்: ஈரோடு.

—:0:—

மூலதனம்: ரூ. 30,000.

பங்கு 1க்கு ரூ. 10 வீதம் கொண்ட 3000 பங்குகளாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

பங்குப்பணங்கள் 4 தடவையாக வசூலிக்கப்படும்.

தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அறிவு வளர்ச்சியையும் கருதி நிறுவிய இக்கழகம் அறிவியல் நூற்கள் பல எழுதியும் மற்ற பாஷைகளிலுள்ள பகுத்தறிவு நூற்களையும் விஞ்ஞான நூற்களையும் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடுவதுடன் தமிழிலுள்ள அறிவியல் நூற்களை ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் மூட நம்பிக்கையையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து எங்கும் பகுத்தறிவு ஜோதியைத் தோன்றச்செய்ய உழைக்கும்.

பகுத்தறிவு இயக்க அபிமானிகள் தங்களாலியன்ற பங்கெடுத்து இக்கழகத்தை ஆதரிக்க முன் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அப்ளிகேஷனுடன் பங்கு ஒன்றுக்குள்ள ரூ. 10ல் ரூ. 2½ வீதம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்குரிய முதல் வாய்தா பணம் செலுத்தவேண்டும்.

குறிப்பு: — விபரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

அ. இராகவன்,
காரியதரிசி, பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,
43, கச்சேரி வீதி, ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. சிதம்பர ரகசியம் ... 0—8—0
2. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
3. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
4. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
5. ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் ... 0—6—0
6. பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை 0—6—0
7. மோட்டார்காரர் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0
சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)
விலை ரூ. 1—0—0

"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

சுயமரியாதை இயக்கத் தோழர்கள்.

தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, முதலிய எல்லா தலைவர்களது படமும் $6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. $8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ 1-க்கு 0—12—0. மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 12—8—0 வீதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது எடுத்தபடம் $8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ சைசில் உள்ள படம் ரூ 0—12—0.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். முன்பணமில்லாத ஆர்டரை கவனிக்கப்படமாட்டாது.

விலாசம்:—
பாலு & Co.,
No. 3 ஒப்பணக்காரத்தெரு,
ஈரோடு

சுயமரியாதை தங்கரத்தினத் தொம்பாங்கு.

இது விருதுநகர் 3வது சு. ம. மகாநாட்டின்போது ஈ. வெ. ரா. முன்னிலையில் படிக்கப்பட்டது. சுயமரியாதைக் கொள்கை முழுதும் தழுவிய அரிய பாடல்கள் வாய்ந்தது.

புத்தகம் 1க்கு விலை ரூ. 0-1-0
" 12க்குத் தபாற் செலவுள்பட " 0-12-0
" 100க்கு " " " 5-4-0
தனிப்பிரதி வேண்டுவோர் 0-1-6 அனா ஸ்டாம்புஅனுப்புதல்வேண்டும்.

M. R. மத்தரன், கல்வார்பட்டி.
காசிபாளையம் போஸ்டு,
[நிண்டுக்கல் வழி]

இந்தியாவின் குறைபாடு.

160 பக்கம் 0—8—0. 100 புத்தகம் 25—0—0. தபால் செலவு வேறு.

முன் பணம் வராதவர்ட்களை கவனிக்கப்படமாட்டாது. தபால் செலவு சேர்த்தனுப்பாத ஆர்டர்களுக்கு தபால் செலவுக்காக வி. பி. எடுத்துக் கொள்ளப்படும்.

ஈ. வெ. ராமசாமியின் இலங்கை சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை-0-0-6 100-புத்தகம்ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினால் 100-புத்தகம் தபால் சிலவில்லாமல் அனுப்பப்படும்.

மதமும் லெனினும்.

100 பக்கம் விலை அணா 0—4—0. 100 புத்தகம் 12-8-0 தபால் செலவு வேறு.

ஜார்ஜ் பெர்னாட்ஷாவின், அமெரிக்க சொற்பொழிவும், பத்திரிகை பிரதிநிதிகளுக்கு அளித்த சேதிகளும்.

விலை அணா 0—1—0. 100 புத்தகம் 3—0—0. தபால் செலவு வேறு.

இவைகளில் 100 புஸ்தகங்கட்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்கட்கு மேற்கண்ட குறைந்த விலைக்குக் கொடுக்கப்படமாட்டாது. இதற்குக்கமிஷன் இல்லை.

விலாசம்:— மானேஜர்
'குடி அரசு' ஈரோடு.

பண்டிட் ஆனந்தரின், அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துக்கொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியத்தாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேக நோய், குஷ்டநோய், மதுமேக நோய், கூயநோய் முதலிய கொடி வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு, செயற்கை வைத்தியமாகிய நவதாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ன அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தனராதுழைப்பவன் தமிழன். வெட்டுஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அறிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள்நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும்.

விலை அணு 0—4—0

கைவல்யம் அல்லது கலிக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப் பட்டது. இதன் விலை அணு. 0—8—0.

இராமாயண ஆராய்ச்சி.

முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0
இரண்டாம் பாகம் அயோதயா காண்டம் அணு. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக் காணலாம்.
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதன் விலை அணு. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம்.

இதன் விலை அணு 0—3—0

பங்களும் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இதன் விலை அணு 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இதன் விலை அணு 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதன் விலை அணு 0—2—0

ரஷ்யாவைப் பற்றி பெர்னட்ஷா.

விலை அணு 0—1—0.

கடவுளா நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதன் விலை அணு 0 2—0

கடவுளும், பிரபஞ்சமும்.

இதன் விலை அணு 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணு. 0 8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—8—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணு. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.

விலை அணு 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணு 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

இதுதானே தேவை!

இல்லற சுகத்தை யடையச்செய்ய ஏதுவான தாதுபுஷ்டியை அளிக்கும் மாத்திரை.

இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று எண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்துகொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதை திருப்தி பண்ணும் மாண்பு வாய்ந்த தென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்!

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, வீரியக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, சோசம் துவலல், இளைப்பு, தாகம் முதலியவைகளை நீக்கி வீரிய விருத்தி, போகசக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளைக்கொடுக்கும். குளிகை 20 ரூ. 2—0—0. (தபால் சார்ஜ் வேறு)

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S.I.

கடவுள் உணர்ச்சியை ஒழிப்பது
மனிதத்தன்மையை ஒழிப்பதாகும்.

"குமார விகடன்"

ஓர் மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

உங்கள் வேலைக் கஷ்டங்களினிடையே சிரித்து மகிழ நம்து குமார விகடனைப் படியுங்கள்.

சிறந்த கதைகள், ஆழ்ந்த பொருள்களுள்ள நகைச்சுவை தும்பும் கட்டுரைகள், விகடங்கள், தமாஷ்கள், ஏராளமான படங்கள், சிறுகதைகள், பரிசப்பந்தயங்கள் முதலியன நிறைந்து கிடக்கின்றன. அவை ஒவ்வொரு பக்கமும், ஒவ்வொரு வரியும் நகைச்சுவையைத் தந்து இன்புழூட்டுவன.

ஸ்ரீமுகவு சித்திரைமீ 1-உ முதல் வெளிவரும். பழைய பிரதிகள் கிடைக்கமாட்டாது. ஆகையால் முதலிலிருந்து சந்தாதாரராய்ச் சேர்வதே நலம்.

முதல் வெளியீட்டில் 25 ரூபாய் பந்தயமென்றும் ஒருவருஷ பத்திரிகை இனம் பந்தயமென்றும் ஆக இரண்டு பந்தயங்கள் வருகின்றன.

டிம்மி 1/8 அளவில் 80 பக்கங்கள் நேர்த்தியாக அச்சிடப்பட்டது

வருட சந்தா ரூ. 1—4—0 சந்தா மணியார்டராக அனுப்பினால் 2 அணா செலவு, வி. பி. செய்தால் 5 அணா ஆகிறது. ஆகையால் சந்தா தொகையை மணியார்டர் செய்வதே நலம்.

மானேஜர், குமார விகடன், காஞ்சீபுரம்.

குறிப்பு:—எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை—நல்ல கமிஷன் கொடுக்கப்படும். விவரத்திற்கு எழுதவும்.

உண்மை விளக்கம் பதிப்பகத்தால் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப் பட்டது.